89

APR.53.

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

189
2-53.
REGISTRAR OF BOOKS
APR 1953
MADRAS

4

ஜெமினியார் நடத்திய அறிவுச் சோதனையில் முதல் நான்கு பரிசுகளைப் பெற்ற குழந்தைகள்: (1) ஜே சந்திரா. (2) பி. என். வைத்திநாதன். (3) காமாக்ஷி. (4) என். சந்தானம்.

அறிவுச் சோதனையின் நீதிபதிகளாக இருந்தவர்களுக்கு ஜெமினியில் அளித்த விருந்தின்போது எடுத்த படம்.

மலர்: 4 இதழ்: 4

ஏப்ரல் '53

குழந்தைகளே !	பக்கம் ..	2
அசட்டுப் பிச்சு - ஆர்வி	.. ..	3
சூரிய நமஸ்காரம் - திரிவேதி	..	9
சினிமா டைரி - எஸ். வி. ரமணி	..	13
அசடு வழிந்தது-த. சேதுராமன்	..	18
குப்பு வாத்தியார் - டி. வி. ரங்கசாமி		20
வீரன் பாபு - கி. சுந்தரேசன்	..	21
சுக்கிரன் - பெ. நா. அ., ஜே. பி மா.		25
பிஸினஸ் புலி - 'ராஜா'	.. ..	30
சரியான கிண்டன்-எஸ். ரங்காச்சாரி		34
வெள்ளை மூக்கன் - எஸ். மாலதி		37
காங்கருக் குட்டி - 'அமா'	..	41
அபாயச் சங்கு - 'நீலம்'	.. ..	45
ஜாதி மாம்பழம்-'வாண்டுமாமா'	..	49
கண்ணன் தபால்	.. ..	53



வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், மஞ்சரி, கண்ணன்
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும்
கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

சென்ற இதழில் ஆரம்பமான அசட்டுப் பிச்சுவைப் பாராட்டி ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்துள்ளன. கடிதம் எழுதிய எல்லாக் குழந்தைகளுக்கும் என் நன்றி. கதையின் ஆரம்பமே ஜோர், அபாரம் என்றுதான் எல்லாரும் ஒரு முகமாக எழுதியிருக்கிறார்கள். அவற்றில் சுவையான சில கடிதங்களை அடுத்த இதழில் வெளியிடுகிறேன். ஆரம்பத்தைப் போலவே, இன்னும் சொன்னால், ஆரம்பத்தைவிட இன்னும் விறுவிறுப்பாகவே கதை செல்லும் என்று உறுதியாகக் கூறுவேன். ஆயிரக்கணக்கான குழந்தைகள் இந்தக் கதையை ஆவலுடன் எதிர்பார்த்துப் படிக்கிறார்கள் என்பதை எண்ணும்போது எங்களுக்குப் பெருமையாகவே இருக்கிறது. உங்கள் ஆவலைப் பரிபூரணமாகத் திருப்தி செய்விப்பது எங்கள் கடமை அல்லவா? அந்தக் கடமையை நிறைவேற்றி வைப்போம்.

இந்த இதழில் சூரிய நமஸ்காரம் வெளியாகியிருக்கிறது. இது உங்கள் கவனத்தைக் கவரும் என்று நம்புகிறேன். சூரிய நமஸ்காரம் செய்வதால் உடம்பின் சகல உறுப்புக்களும் சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்குகின்றன. ஒவ்வொரு நரம்பும் தசையும் சரியாக இயங்கி வேலை செய்யும். இதைச் செய்வதற்கு இந்தப் படங்கள் பயன்படும். ஆயினும் நீங்களாகச் செய்து பார்ப்பதைவிட, உடல் பயிற்சி ஆசிரியர் உதவியுடன் செய்வதே நல்லது. இந்த நமஸ்காரத்தை மந்திரத்தோடு செய்தால் மிகுந்த பலன் ஏற்படும். அதைத் தெரிந்தவர்களிடம் கேட்டுச் செய்தால் இன்னும் நல்லது. இந்தப் பயிற்சி விஷயமாய் ஏதேனும் கேட்க வேண்டியிருந்தால் ஸ்ரீ டி. வி. திரிவேதி, கண்ணன் ஆசிரியர் மேற்பார்வை என்று விலாசமிட்டு எழுதிக்கேட்கலாம். மாணவர்களுடைய தினசரிக் கடமைகளை எப்படிச் செய்வது என்ற குறிப்பு அடுத்த இதழில் வெளியாகும்.

குழந்தை பனியன் போட்டுக்கொண்டு படத்தில் காணப்படுகிறான். சூரிய நமஸ்காரம் செய்யும்போது பனியன் போட்டுக்கொள்ளவேண்டாம். அவன் சிறுவனானதால் படத்தில் பார்வைக்கு அழகாக இருக்கவேண்டும் என்று பனியனுடன் எடுத்திருக்கிறோம். சூரிய நமஸ்காரத்தில் மொத்தம் பன்னிரண்டு நிலைகள் உண்டு. இதைப்பற்றி விவரமாக அறிய எண்ணுபவர்களுக்கு யோசனை சொல்ல ஸ்ரீ டி. வி. திரிவேதி தயாராக இருக்கிறார். சூரிய நமஸ்காரம் முதலான ஆஸனப் பயிற்சிகளைப் பிரசாரம் செய்வதே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டவர் அவர். அவருக்கு எழுதும்போது பதிலுக்கு என்று தபால் தலை வைத்தால் போதும்.

கும்பகோணத்தில் அடுத்த கண்ணன் கழகக் கூட்டத்தை விடுமுறை விட்டதுமே நடத்த எண்ணுகிறோம். பரீட்சைக்கு முன் வைத்துக் கொள்வது உங்கள் படிப்புக்கு இடையூறாக இருக்கும்.

அடுத்த இதழில் ஒரு பரிசுத் திட்டம் வெளியாகும். நீங்கள் எல்லாருமே அதில் கலந்துகொள்ளலாம். விடுமுறை நாளில் உங்களுக்குச் சரியான வேலை வேண்டாமா? அதற்காகத்தான் இந்தத் திட்டம். அடுத்த இதழில் சந்திப்போம். உள்ளே அசட்டுப் பிச்சு என்ன ஆனான் என்று பாருங்கள்!

ஜய் ஹிந்த்!

ஆசிரியர்.

அசட்டுப் பிச்சு

ஆர்வி

நங்கபுரத்தில் எங்கே பார்த்தாலும் கிரீன் லண்ட்ஸைப் பற்றியப் பேச்சாகவே இருந்தது. இப்படிப்பட்ட ஒரு பரபரப்பான சம்பவம் அந்த ஊரில் இதுவரை நிகழ்ந்ததேயில்லை. ஊரிலுள்ள எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களும் கெடுபிடியுடன் இருந்தன. கையில் கத்தித் துப்பாக்கியுடன் போலீஸ் பாராக்காரன் விறைப்பாகச் சிலை போல நின்றான். போலீஸ் மோட்டார் ரோந்து சுற்றியது. டெலிபோன் செய்திகள் பறந்தன.

எள்ளு மண்டி ஐயாசாமி மிகுந்த கவலையுடன் நாற்காலியில் சாய்ந்து கிடந்தார். நிமிஷத்துக்கு ஒரு தரம் டெலிபோன் மணி கிணுகிணுத்துக் கொண்டேயிருந்தது. அவருக்குப் பதில் சொல்லி மாளவில்லை. பிச்சுவைக் காணவில்லையே என்று கவலைப்படுவதா? இவர்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லையே என்று கவலைப்படுவதா?

"பையனைக் காணவில்லையாமே?" என்று ஒரு செய்தி.

"பையன் வந்துவிட்டானா?" என்று ஒரு செய்தி.

"இவனை என் ஸார் டிபார்ட்டிக்கெல்லாம் அழைத்துக்கொண்டு போகிறீர்கள்?" என்பார் ஒருவர்.

"அதெல்லாம் இருக்கட்டும்; முதலில் அங்கே என்ன நடந்தது என்று சொல்லுங்கள்!" என்று ஆரம்பிப்பார் ஒருவர். இதற்கெல்லாம் இதுவா சமயம்? ஐயாசாமிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. சற்றைக்கு ஒரு தரம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்து விசாரிக்க வேண்டியிருந்ததால் டெலிபோன் நல்ல காலமாகப் பிழைத்தது. இல்லாவிட்டால் அதை உடைத்துத் தூள் தூளாகச் செய்திருப்பார்.

பிச்சுவைக் காணவில்லை என்றதும் அவருக்கு ஆகாரமே செல்லவில்லை. ஒரு வேலையும் செய்ய ஓடவில்லை. மண்டிக்கே போக அவருக்கு மனமில்லை. ஆனால் பிச்சுவின் அம்மாவுக்குப் பையன் மகா மேதாவி என்று எண்ணம். "நீங்கள் வேணுமானால் பாருங்களேன், பிச்சு எப்படியாவது வந்துவிடுவான்!" என்றாள் முதலில். ஆனால் நேரம் ஆக ஆக, அவளுக்கும் அடிவயிற்றில் புளியைக் கரைத்தது. "குளம், கிணறுகளைப் பார்க்கச் சொல்லுங்களேன்!" என்று ஆரம்பித்துவிட்டாள்.

"டிரிண், டிரிண்!"

எரிச்சலுடன், "என்ன?" என்றார் ஐயாசாமி, ரிஸீவரில்.

"பையன் வந்துவிட்டானா?"

"சட்! உங்கள் தொல்லையே பெரிதாகப் போச்சே! உங்களுக்கு வேறே வேலை இல்லையா, ஐயா?" என்று டோஸ் விட்டார் ஐயாசாமி.

"அப்போ வரவில்லையா?"

"இல்லை. இல்லை. இல்லை. போதுமா! இன்னும் இரண்டு தரம் சொல்லட்டுமா?"

"ரொம்பக் கோபமோ?"

"இல்லே, இல்லே! ரொம்பச் சந்தோஷமா சிரித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கேன்!"

"ஓகோ, அப்போ ஒரு நிமிஷம் இந்த எ-1 போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டுப் போகிறீர்களா?"

ஐயாசாமிக்குத் திக்கென்றது. யாரோ என்று நினைத்துப் போனில் தாறுமாறாகப் பேசி விட்டோமே என்று நடுக்கம் எடுத்தது.

"யார் பேசறது....?" என்று குழைவாகக் குரலை மாற்றிக் கொண்டு கேட்டார்.

"இன்ஸ்பெக்டர் குரூப்!"

"ஹி..ஹி..ஹீ! நான்..தெரியாமல்..வருத்தத்திலே..கோபமாய்...கோபத்திலே...பேசிட்டேன்..மன்னிக்கணும்.." என்று

டெலிபோனுக்குப் பல்லைக் காட்டினார்.

“சரி; பிச்சுவின் போட்டோவை எடுத்துக்கொண்டு வாருங்கள்!”

ஐயாசாமி போட்டோவைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்தார்.

மறுபடியும் டெலிபோன்!

“என்ன?” என்று பயபக்தியுடன் கேட்டார் ஐயாசாமி.

“பிச்சு வந்தட்டானா?”

“யார் பேசறது?”

“நான்தான் வைத்தி..எங்க மாமா வீட்டிலேருந்து பேசறேன்! ஒரு முக்கியமான......”

போலீஸ் இன்ஸ்பெக்டரோ என்று பயந்துகொண்டு பேசிய ஐயாசாமி இதற்குப் பதில் சொல்லாமல் பாதியில் டக்கென்று ரிஸீவரைக் கீழே வைத்தார். “ரிஸீவர் இருக்கிறதனால்தானே சும்மாக் கூப்பிடுகிறார்கள்? அதைக் கீழே எடுத்து வைத்துவிட்டால்!” என்று சொல்லிக் கொண்டார்.

“டிரிண்....டிரிண்......”

ஐயாசாமி ரிஸீவரை எடுத்தார். பேசுவதற்காக அல்ல; தூக்கி உடைப்பதற்காக. ஆனால் ரிஸீவரில், “அப்பா இருக்காரா?” என்று குரல் கேட்டது.

“யாரு?”

“அப்பா!”

“அப்பாவா?” - ஐயாசாமியினால் தம் காதுகளையே நம்ப முடியவில்லை. “யார் பேசறது? யாருடா பேசறது?—

“யாரு, பிச்சுவா? உன் குரலாடா இது? நான்தாண்டா, அப்பா—பேசறேன்.”

“நான்தான் பிச்சு பேசறேன், அப்பா!”

“எங்கேருந்தடா பேசறே?”

“மாடியிலேருந்துதான் அப்பா!”

“என்னது?”

“என்னை ஒண்ணும் செய்ய மாட்டியே!”

“உன்னை...உன்னை...உன்னை-”

கோபம், சந்தோஷம், பிரமிப்பு எல்லாம் கலந்த நிலையில், “எப்படா வந்தே?” என்று ஐயாசாமி திணறினார். “எப்படிடா வந்தே?”

“ராத்திரியே பிடிச்சு நான் இங்கேதானே இருக்கேன். நான் எங்கியும் போகல்லியே? வந்துவிட்டேனே!”

ஐயாசாமி மாடிக்கு ஓடினார். அவர் வீட்டில் மாடிக்கும் டெலி போன் இருந்தது. பிச்சு அதன் முன் உட்கார்ந்துகொண் டிருந் தான்.

"என்னை ஒண்ணும் செய்யாதே அப்பா!" என்று கெஞ்சினான்.

"எண்டா!—ஊரிலே உன்னைத் தேடாத இடம் இல்லியே! நீ இங்கே எங்கே இருந்தாய்?" என் றார் ஐயாசாமி.

பிச்சு கோணிச் சாக்குகள் மடித்துவைத்திருந்த எதிர் அறை யைக் குறிப்பாகப் பார்த்தான். அந்த இடத்தில் படுத்தால் யாரா லும் கண்டுபிடிக்க முடியாது!

"இங்கே எப்படி வந்தே? எங்கே சாப்பிட்டாய்?"

"நீ ஏதாவது கோபித்துக் கொள்வாய் என்று ஒளிஞ்சிண் டேன், அப்பா!" என்று ஒரு மூட்டையைப் பிரித்தான். முதல் நாள் டிபார்ட்டியில் வைத்த ஸ்வீட்டுகள், பக்ஷணங்கள் எல்லாம் இருந்தன. ஐயாசாமிக்குச் சிரிப் பதா, கோபித்துக்கொள்வதா என்று ஒன்றும் புரியவில்லை.

"சைக்கிள் எங்கே?"

"குடுமி வைத்தியிடம் இருக்கு.."

அப்போதுதான் சற்றுமுன் வைத்தி போனில் பேசியது ஞாபகத்துக்கு வந்தது. "சரி; போய் முதல்லே குளிச்சுட்டுச் சாப் பிடு. அப்புறம் உன்னோடு பேசிக் கொள்கிறேன்" என்றார்.

* * *

தெரு முனையில் முன்போல் மாணக்கம், கீச்சு மூச்சு லோகு, பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த், டைகர் மணி ஆகிய நால்வரும் பேசிக்கொண் டிருந்தார்கள்.

"டேய்! இந்த அசட்டுப் பிச்சு வுக்கு நன்றாய் வேணும்டா! நான் வறேன்னேனே. கேட்டானா?" என்றான் பிரிஞ்ஜால்.

"சே! ஆயிரம் இருந்தாலும் அவனை ஒண்ணும் சொல்லாதேடா! என்ன ஆபத்திலே இப்ப மாட் டிண்டு இருக்கானோ, என்னவோ?" என்றான் மாணிக்கம்.

"போலீஸ் இன்ஸ்பெக்டர் வேஷம் போட்டுண்டு வந்திருக் கானும்டா திருடன்! திடீரென்று கர்ரெண்ட் எப்படி நின்னுது?"

"அதாண்டா, பிளான் போட்டுச் செய்த வேலைடா!"

"வாசல்லே வைத்தி நின் னுண்டே யிருந்தானும். லைட் 'ஆப்' ஆனபோது ஏதோ வாசல்லே சத்தம் கேட்டதாம். கால்மணி ஒரே கலாட்டாவாக இருந்ததாம். வைத்திக்கு விஷயம் புரியவில்லை. யாரோ ரெண்டுபேர் ஓடினப்பலே இருந்ததாம். திடீர்னு இவன் கையிலே சைக்கிளைக் கொடுத் துட்டுப் பின்னாடி வந்தவன் ஓடி னனும். அவன் அசட்டுப் பிச்சு வாத்தான் இருக்கணும் என்கி றான் வைத்தி!" என்றான் மாணிக்கம்.

"நல்லகாலம், நான் போகாமல் இருந்தேனே" என்றான் பிரிஞ் ஜால். இப்படி இவர்கள் பேசிக் கொண்டே யிருக்கும்போது, "டேய், அதோ வர்றாண்டா ஐ. பி.!" என்று கூவினான் லோகு.

ஐ. பி. இவர்கள் அருகில் வந் ததும் குதிரைமேலிருந்து இறங்கு வதுபோல் இறங்கி நின்றான்.

எல்லா நண்பர்களும் வாயைப் பிளந்துகொண்டு நின்றார்கள்.

என்ன பேசுவது, என்ன கேட்பது என்று அவர்களுக்குப் புரியவில்லை. மாணிக்கம் மட்டும், "சைக்கிள் எங்கேடா இருந்தது, ஐ. பி.? வேகமாக எங்கேயிருந்துடா வர்றே?" என்று மெதுவாகக் கேட்டான்.

பிச்சு வெகு அலட்சியமாக, "இப்பதாண்டா வைத்திக்கிட்டேயிருந்து வாங்கிண்டு வந்தேன்!" என்றான்.

"என்னடா நடந்தது அங்கே?" என்றான் பிரிஞ்ஜால். என்ன, ஏது, எப்படி என்று மற்ற நண்பர்களும் ஒரே சமயத்தில் கேட்டார்கள். இதற்குள், "பூம்..ம்!" என்று சங்கு அலறுவது போல் தெருமுனையில் ஒரு போலீஸ் மோட்டார் வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்தானோ இல்லையோ, பிச்சு கையைத் தூக்கி நண்பர்களிடம் மௌன விடை பெற்றுக்கொண்டு சைக்கிள்மீது ஒரே தாவாகத்

தாவி எறினான். அடுத்த கணம் சைக்கிள் போனதிசை தெரியாமல் மறைந்தது.

நண்பர்கள் அருகில் வந்ததும் மோட்டார் நின்றது. போலீஸ் இன்ஸ்பெக்டர் வெளியே தலையை நீட்டி, "அசட்டுப் பிச்சு எங்கே?" என்றார்.

"இதோ இப்பத்தான் ஸார், மெயின் ரோடு வழியாப் போறான்!" என்றான் பிரிஞ்ஜால். அவனுக்கு ஐ. பி. யிடம் கொஞ் சம் ஆத்திரம். அதற்குமேல் அவர் ஒன்றும் கேட்கவில்லை. "சரி; காரை விடு!" என்றார்.

வெகுநேரம் வரையிலும் சைக் கிளில் அசட்டுப் பிச்சு எங்கே போய்க்கொண் டிருக்கிறான் என்பது தெரியவேயில்லை. கடைசி யாக ஹை ரோடு வளைவுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய பாலம் இருந்தது. மேட்டில் சைக்கிளை உதைத்து மிதித்துக்கொண்டு போவதை மோட்டாரில் வந்த ஜவான்களும் இன்ஸ்பெக்டரும் பார்த்துவிட்டார்கள்.

"பூம்..ம்......"

பிச்சுவுக்கு உயிரே கூண்டில் இல்லை. உயிரைக் கையில் பிடித் துக்கொண்டு சைக்கிளை மிதித்துக் கொண்டே முன்னேறினான். சைக்கிள் இறக்கத்தில் வெகு வேகமாக ஓடி இறங்கி யது. சமதளமாக இருந்த சாலை யில் செல்லாமல் பிச்சு அங்கே தென்பட்ட ஒற்றையடிப் பாதை வழியே குறுக்காகச் சைக்கிளைத் திருப்பினான். மோட்டார் மேலே போக முடியாமல் நின்றது. "பூம்..ம்..!" என்று எச்சரிக்கைச் சங்குமட்டும் அலறிக்கொண்டே யிருந்தது.

அந்தக் குறுக்குப் பாதை பழைய மணிக்கூண்டு மண்டபத் துக்குச் சரியாகப் போய், சாலை யோடு சேருகிறது. பிச்சு குருட்டுத் தனமாகப் போய்க்கொண் டிருந் தான். சுற்றிக்கொண்டு ஒருகால் மோட்டார் வந்தாலும் வந்துவிடும் என்று எண்ணியதும் அவனுக்கு டக்கென்று ஒரு யோசனை தோன் றியது. சைக்கிளை அந்தப் பெரிய மணிக்கூண்டுக்குப் பின்னால் உருட்டி விட்டான். தடதட வென்று மணிக்கூண்டின் உட்புறம் நுழைந்தான். உள்ளே சுற்றிச் சுற்றிப் படிக்கட்டுகள் இருப்பது அவனுக்குத் தெரியும். நல்லகாலம்; அந்தக் கதவு திறந்திருந்தது. அவன் சிறிதும் தயங்காமல் படி களில் வேகம் வேகமாகத் தாவித் தாவி எறினான்.

துடைகள் இரண்டும் இரும் பாகக் கனத்தன. மொத்தம் எழு டுக்குக் கூண்டு அது. ஆர்க்காட்டு நவாப் காலத்தில் கட்டிய அந்த இடிந்த கோரியைப் பின்னால் பழுது பார்த்து, மணிக்கூண்டாக மாற்றியிருந்தார்கள் ஆங்கிலேயர் கள். சுமார் இருநூற்றைம்பது அடி உயரத்தில் அது வானளாவி நின் றது. முன் எப்போதோ அதில் கடிகாரம் இருந்திருக்கலாம். இப் போது அது காலியாகத்தான் இருந்தது. இரண்டு அடுக்கு ஏறிய தும் கீழே எதிரொலியுடன் தட தடவென்று சத்தம் கேட்டது. பிச்சு கீழே பார்த்தான். போலீஸ் கோஷ்டியார்தான்!

"எய், தம்பி!" என்று ஒருவன் குரல் கொடுத்து அழைத்தான்.

ஆனால் பிச்சுவோ காதில் வாங் காமல் மேலே போய்க்கொண்டே யிருந்தான். (தொடரும்)

சூரிய நமஸ்காரம்

டி. வி. திரிவேதி



சூரிய நமஸ்காரம் தெய்வ வணக்கம் மட்டுமல்ல; அது ஓர் அற்புதமான உடற்பயிற்சி. இந்தப் பயிற்சியினால் உடலின் எல்லா அவயவங்களும் உறுதி பெறுகின்றன. ரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. முகத்தில் ஜீவகளை ஏற்படுகிறது. உடலும் மனமும் ஆரோக்கியம் அடைகின்றன.

குழந்தைகள் இதைச் சிறுகச் சிறுகத்தான் பயிலவேண்டும். ஆரம்பநாட்களில் ஒன்று, இரண்டு, மூன்று என்று தொடங்கினால் போதும். இப்படியே கொஞ்ச நாள் ஆனபிறகு பன்னிரண்டுநமஸ்காரம் வரையில் செய்யலாம். ஆறு வயது முதல் பதினாறு வயதுள்ள குழந்தைகள் வரையில் இவ்வளவுக்கு மேல் செய்யவேண்டாம் பதினைந்து

வயதானவர்கள் பதினெட்டிலிருந்து இருபத்தைந்துக்குமேல் போக வேண்டாம். பெண்களும் பழகலாம்.



அதிகாலையில் எழுந்ததும் முதல் வேலையாகக் காலைக் கடன்களை முடித்துக்கொள்ள வேண்டும். (மலசுத்தி சரிவர ஆகாவிட்டால் இரவில் படுக்கும்போது சூடாகப் பால் கொஞ்சம் குடித்தால் சரியாகிவிடும். சூடான தண்ணீரில் இரண்டு ஸ்பூன் நெய்யை விட்டும் சாப்பிடலாம்) பிறகு சுத்தமான தண்ணீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். ஜட்டியோ, டிராயரோ உறுத்தாத ஆடையாக அணிந்து கொண்டு காற்றோட்டம் உள்ள இடத்தில் நமஸ்காரம் செய்ய வேண்டும். நமஸ்காரம் செய்த பிறகுதான் வேறு பயிற்சி செய்வதாய் இருந்தாலும் செய்ய வேண்டும். முன்னால் செய்யக் கூடாது.



சூரிய நமஸ்காரம் செய்தபிறகு கால்மணி கழித்து நீராகாரமோ







பசும்பாலோ சாப்பிடலாம். காபி, டீ எதுவும் சாப்பிடக்கூடாது.

1. முதலில் நெஞ்சுக்கு நேராகக் கைகளைக் கூப்பிக்கொள்ளுங்கள். கால்கள் இரண்டும் நேராகச் சேர்ந்திருக்கவேண்டும்.

2. மூக்கின் வழியாகவே சுவாசம் விடவேண்டும். கைகளை உயரே தூக்குங்கள்.

3. அப்படியே கால்கள் வளையாமல் குனிந்து இரண்டு கைகளும் தரையில் பதியும்படி வைக்கவேண்டும். கையை ஊன்ற முடியாதவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வளைந்து பயிற்சி செய்தால் சிறிது நாட்களில் வைத்து விடலாம்.

4. இப்பொழுது கைகளை எடுக்காமல் இடது காலைக் கைகளுக்கு நேராக ஊன்றிக் கொண்டு, வலது காலைப் பின்னுல் நீட்டவேண்டும்.

5 பிறகு இடது காலையும் சேர்த்து நீட்டிக்கொண்டு உடம்பு தரையில் படாதவாறு இருக்கவேண்டும்.

6. மோவாய், மார்பு, முழங்கால்



இவைகள் மட்டும் தரையில் பட வேண்டும்.

7. அப்படி முன்னங்காலை ஊன்றி, கைகளை உயர்த்தி, உடம்பை நிமிர்த்தி வளைக்கவேண்டும்.

8. பிறகு இடுப்பை மேல் புறமாக உயர்த்திக் கவிழ்ந்துகொண்டால், பாதங்களைப்பார்க்கும் நிலையில் முகத்தை வைத்துக்கொள்ளலாம்.

9. மீண்டும் பழையபடி எழுந்திருக்க, வலது காலை ஊன்றிக் கொள்ளவேண்டும்.

10. பிறகு இடது காலையும் சேர்த்து, தரையிலிருந்து கைகளை எடுக்காமல் முன்புறமாக வளைந்து நிற்கவேண்டும்.

11. இரண்டாம் பயிற்சிபோலக் கைகளைச் சேர்த்து உயரே தூக்கிக் கொள்ளுங்கள்.

12. நமஸ்காரம்; ஆரம்பத்தில் செய்தபடியே தான்.

பயிற்சி செய்யும் குழந்தையின் பெயர்:
வி. கிரிதர்நாத், வயது: ஆறு.

டி. வி. திரிவேதி
7. சிவராம சாஸ்திரி தெரு,
பார்க் டவுன், சென்னை-3.

சினிமா டைரி

எஸ். வி. ரமணி

ஸ்ரீமான் திருவேங்கடத்தின் மருமகன்தான் துரை. விஷமத்திலும் சரி, வாய்த் துடுக்கிலும் சரி, அவனுக்கு இணை அவனேதான். திருவேங்கடத்தின் தலையைக் கண்டால்தான் கொஞ்சம் அடங்கி ஒடுங்கி ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஐந்தரைக் கட்டை சுருதியில் கத்துவான். அவர் கண் முன்பு ஏதாவது படித்துக்கொண்டிருந்தால் போதும்; யார் என்ன புகார் செய்தாலும் அவர் கோபிக்க மாட்டார். அவனும் எப்படியோ ஒவ்வொரு வருஷமும் பரீட்சையில் தேறிவிடுவான்.

ஸ்ரீமான் திருவேங்கடம் அவனை டைரி எழுதி வரும்படி அடிக்கடி சொல்லி வந்தார். அவனும் அவர் முன்னிலையில் உடனே செய்து விடுபவன்போல் தலையை ஆட்டுவான். ஆனால் அதைக் காரியத்தில் காட்ட முடியாதவனாக இருந்தான். ஏனென்றால் அவன் டைரி எழுத ஆரம்பித்தால் அதில் அவன் விஷமத்தைத்தானே எழுத வேண்டிவரும்? அதை என்றாவது மாமா பார்த்தால்..? கையில் விளக்கை வைத்துக்கொண்டு யாராவது குட்டிச் சுவரில் முட்டிக் கொள்வார்களா?

தினம் காரியாலயத்துக்குப் போய்வரும் அவருக்கு வீடு திரும்பியதும் அடித்துப் போட்டதுபோல இருக்கும். அந்த நிலையில் அவனை, "டைரி எழுதினாயா?" என்று தினம் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா? எப்போதாவது ஞாபகம் வந்து கேட்டால், "நோட்டுகூட வாங்கிவிட்டேன், மாமா. எழுதிண்டே இருக்கேன், மாமா" என்று அடக்கமாகப் பதில் சொல்லி வந்தான்.

ஒரு நாள் மாலை மணி ஐந்து இருக்கும். திருவேங்கடம் கொஞ்சம் முன்னதாகவே வீட்டுக்கு வந்துவிட்டார். துரை மேஜையில் உட்கார்ந்தபடி ஒரு சிறு நோட்டில் ஏதோ எழுதிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். 'டைரிதான் எழுதுகிறான் போலிருக்கிறது' என்று சந்தோஷத்துடன் அவன் அருகில் போனார். மாமா வருவதைப் பார்த்ததும் துரை திரு திருவென்று விழித்தான். மெதுவாக எழுதிக்கொண்டிருந்த நோட்டை டிராயரில் தள்ளிவிட்டுப் பக்கத்தில் தயாராய்ப் பிரித்து வைத்திருந்த புத்தகத்தை இழுத்துக் கொண்டான்.

"என்னடா, டைரிதானே எழுதிக்கொண்டிருந்தாய்?" என்றார் திருவேங்கடம்.

"இப்பத்தான் எழுதினேன், மாமா. நாளைக்குப் பரீட்சை, இதைப் படிக்கணும்" என்று பதில் சொல்லிக்கொண்டே புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

"சரிதான், டைரியை எடு."

"எதுக்கு, மாமா?"

"எப்படி எழுதியிருக்கேன்னு பாக்கறேன்."

"நன்றாய்த்தான் எழுதியிருக்கிறேன், மாமா."

இடது கண் ஓரத்தால் மாமாவின் முகத்தைப் பார்க்க முயன்றான் துரை.

"எடேன், பார்க்கலாம்" என்றார் கண்டிப்பான குரலில்.

"நான் படிக்கணும், மாமா!"

"எடுத்துக் கொடுத்துட்டுப் படியேண்டா"

துரை டைரியை எடுத்துக் கொடுக்கத் தயங்கியதும் அவர் சந்தேகம் வலுத்தது. மிகவும் கடுமையான குரலில் கேட்டார்.

"இங்கே இல்லே, மாமா. பள்ளிக்கூடத்திலேயே வைத்து விட்டு மறந்துவிட்டேன். நாளைக்குக் கொண்டுவந்து காண்பிக்கறேன்" என்றான் துரை தட்டுத் தடுமாறியபடி. அவன் முகம் பயத்தால் சிறுத்தது. ஆடு திருடிய கள்ளன் மாதிரி விழித்தான்.

துரை ஏதோ சூது செய்கிறான் என்று தெரிந்ததும், "யார் கிட்டே இதெல்லாம்? போக்கிரிப் பயலே, கொஞ்ச முன்னே நீ இங்கே எழுதிண்டிருக்கலே ஒரு சின்ன நோட்டிலே. அதை எடு" என்று சீறி விழுந்தார்.

பொறியில் அகப்பட்ட எலி மாதிரித் தத்தளித்தான் துரை.

"அது என் நோட்டில்லே, மாமா. என் சிநேகிதனுடையது. டைரி இல்லே" என்றான் துரை வாயில் வந்தவாறு.

"கழுதை! என்னை என்ன எய்க்கவா பாக்கறே? தடிப்பயலே, இந்தப் பொய்யும் புனை சுருட்டும் யார்கிட்டே?" என்று கோபத்தில் திருவேங்கடம் அவனை ஒரு கையால் இழுத்துத் தள்ளிவிட்டு டிராயலிருந்து அந்தச் சிறு நோட்டைத் தேடி எடுத்தார்.

நீதிபதியின் எதிரில் நிற்கும் குற்றவாளியைப் போல் சப்த நாடியும் ஒடுங்க நின்றுகொண் டிருந்தான் துரை.

அழகாகக் காலிகோ பைண்டு செய்திருந்த அந்தச் சிறு நோட்டின்மேல் முத்துக்கோத்ததுபோல் 'சினிமா டைரி' என்று எழுதியிருந்தது. அதைச் சுற்றிக் கலர்ப் பென்சிலால் கவர்ச்சியாகப் பூப் போட்டிருந்தது. திருவேங்கடம் மேல் அட்டையைத் திருப்பினார். என்ன ஆச்சரியம்?

அந்த நோட்டில் ஆறு பிரிவுகள் சிவப்பு மையால் வெகு கச்சிதமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிரிவின் ஆரம்பத்திலும், தேதி, சேர்ந்து போனவர்கள், சினிமாவின் பெயர், நடிக நடிகையர்கள், வகுப்பு, எந்த ஆட்டம் என்று முறையே எழுதப்பட்டிருந்தது. அந்தக் குறிப்புக்களிலிருந்து வாரத்திற்கு ஒரு சினிமாவுக்குக் குறையாமல் துரை போயிருப்பது நிதரிசனமாகத் தெரிந்தது.

இதைப் பார்த்ததும் திருவேங்கடத்தின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. 'இந்த டைரி எழுதிய நேரத்தில் எவ்வளவோ உபயோகமான காரியங்கள் செய்யலாமே! சினிமாவுக்குப் போய் உருப்படாமல் போவதுடன் அதை வேறு மறக்காமல், தேதி வாரியாக எழுதி நேரத்தைப் பாழடிக்கிறானே' என்றதும் திருவேங்கடத்தின் கண்கள் சிவந்தன.

"டேய், இந்த டைரி மட்டும் உன்னால் எழுத முடிஞ்சுதோ? உன்னைச் சும்மா விட்டால் உருப்படமாட்டாய். சினிமா டைரி

யாம், டைரி! காலிப் பயலே!'' என்று கோபத்தில் பளா ரென்று துரையின் கன்னத்தில் சுடச்சுட ஒன்று விட்டார்.

''இல்லே, மாமா.. இனிமே எழுதல்லே, மாமா.''

''என்னடா, எழுதலே?'' - மறுபடியும் ஓர் அறை அவன் கன்னத்தில் விழுந்தது.

''சுளை சுளையாய்ப் பணத்தையும் கொண்டு போய்ப் பள்ளிக்கூடத்தில் கட்டி விட்டு, திருட்டுத்தனமாய்ச் சினிமாவுக்குப் போவதோட இல்லாமே, டைரியா எழுதறே, பயலே!'' என்று அந்த அழகிய டைரியை நாலு சுக்கலாகக் கிழித்து அவன் தலையில் போட்டார் திருவேங்கடம்.

ஒன்றின் மேல் ஒன்றாய் அடி விழுந்த அதிர்ச்சியில் துரை வாயைவிட்டு அழமுடியாமல் கேவினுன். திருவேங்கடத்தின் மனசும்

அவன் நிலையைக் கண்டு உருகியது. கோபம் கொஞ்சம் தணிய வெளியே உலாவி வரக்கிளம்பினார்.

* * *

மூன்று மாதங்கள் கடந்தன. துரையை அதற்குப் பிறகு டைரி சம்பந்தமாக எதுவுமே திருவேங்கடம் விசாரிக்கவில்லை. அன்று வாங்கிய அடியில் அவன் இனிமேல் டைரி எழுதவான் என்ற நம்பிக்கை அவருக்கு. துரைக்கும் பரீட்சைகள் எல்லாம் முடிந்து விட்டன. அன்று கடைசி நாள்.

உடம்பு சரியாயில்லாததால் ஆபீஸ் போகாமல் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார் திருவேங்கடம்.

"மாமா, மாமா. இதோ எனக்கு ஒரு பரிசு கொடுத்திருக்கிறார்கள், ஏ ஒன், மாமா!" என்று திருவேங்கடத்தின் முன் ஒரு புது வருஷத்திய டைரியைக் காட்டினான், சந்தோஷம் தாங்காமல் குதித்தபடியே.

"எதற்கு உனக்குப் பரிசு?" என்று அதைப்பிரித்துக்கொண்டே கேட்டார் திருவேங்கடம்.

"பள்ளிக்கூடத்திற்கு இன்று ஓர் ஆங்கிலேயர் வந்திருந்தார். என் வகுப்புக்கு வந்த போது, "நீங்கள் எல்லாம் டைரி எழுதும் பழக்கம் உண்டா?" என்று கேட்டார். அவர் பேசிய தமிழைப் பார்த்ததும் எனக்கு ஒரே சிரிப்பு, மாமா! எல்லாப் பையன்களும் அடைத்துவைத்த புளி மாதிரி உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். நான் ஜம்மென்று

போலீஸ்காரன்: என்னப்பா, நீ வர வர ரொம்ப மோசமாயிட்டே. சொன்ன வேலையைச் செய்கிறதில்லை! இன்ஸ்பெக்டர் ஐயா கிட்டே சொல்ல வேண்டியது தான்!

கைதி: இந்தாங்க, என் வேலை உங்களுக்குப் பிடிக்கலேன்னா உடனே என்னை வேலையைவிட்டு நீக்கிடுங்களேன்!

—மணி

எழுந்து என் டைரியை நீட்டினேன். அதை வாங்கிப் பார்த்து என் பெயர், வயசு எல்லாம் குறித்திருப்பது சரியா என்று விசாரித்தார். வாத்தியார் என்னைப் புகழ்ந்து என்னென்னவோ சொன்னார். கடைசியில், "இந்தா, துரைராஜ்! இந்தப் புது வருஷத்து டைரியை நான் உனக்குப்

பரிசாக அளிக்கிறேன். வாங்கிக் கொள்" என்று என் கையைக் குலுக்கியவாறே கொடுத்தார். என்னை இன்று பள்ளிக்கூடமே புகழ்ந்தது, மாமா" என்று பிடிபடாமல் குதித்தான் துரை.

அந்த டைரியின் தங்க எழுத்துக்கள் திருவேங்கடத்தின் கண்களைப் பறித்தன. கன ஜோராய்த்தான் இருந்தது அது.

"எண்டா, இந்த இரண்டு மாத டைரியைப் பார்த்தா அதைப் பரிசளித்தார் உனக்கு? அதைக் கொண்டா, பார்க்கலாம்."

"இல்லையே, மாமா! நான் ஒரு வருஷமாய் எழுதுகிறேனே! இதோ, என் டைரி" என்று அவனே தைத்த ஒரு டைரியைக் கொண்டு வந்து கொடுத்தான் துரை.

திருவேங்கடம் அந்தப் பழைய டைரியைப் புரட்டிப் பார்த்தார். வாரத்தில் ஒன்றிரண்டு நாட்களைத் தவிர மீதி நாட்களில் எல்லாம் ஏதோ எழுதியிருந்தான். திருவேங்கடத்துக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவருடைய கைவிரல்கள் மேலும் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தன. ஒரு பக்கம் வந்ததும் அவர் கண்கள் சட்டென்று நிலைத்தன; அந்த வரிகளில் ஓடின:

"மாமா இன்று சக்கையாக மூன்று அறை அறைந்தார். பொறி கலங்கிப் போய்விட்டது. டைரி எழுதுவது எப்படி என்று சொல்லாமல், 'எழுது' என்றால் நான் எப்படி எழுதுவது? சிநேகிதன் எழுதிய சினிமா டைரியைப் பார்த்து நானும் அதுமாதிரி எழுதினேன். இது ஒரு தப்பா...? மாமிதான் என்னைச் சமாதானப்படுத்தி நோட்டும் தைத்துக் கொடுத்தாள். கடந்த இரண்டு மாத நிகழ்ச்சிகளைக் கேட்டு எழுதும் முறையைச் சொல்லிக்கொடுத்தாள். என் மாமி மிகவும் நல்லவள். மாமா இருக்கிறாரே... ஹூம்...முன் கோபக்காரர்! குழந்தைகளின் உள்ளம் தெரியாதவர்..."

அன்றைச் சம்பவத்தைக் கிளறும் அந்தப் பழைய டைரியிலுள்ள வார்த்தைகள் திருவேங்கடத்தின் மனசை உலுக்கி எடுத்தன. கை மேலே ஓடவேயில்லை. "முன் கோபக்காரர், மாமா!" என்று அந்தப் பிஞ்சுக் கை எழுதிய உண்மையை ஒப்புக்கொள்பவர் போல் தலையை ஆட்டினார். "ஆமாம், குழந்தைகளின் உள்ளம் தெரியாதவன்தான். முன்கோபத்தில் அறைந்து விட்டேன்!" என்று தம்மையும் அறியாமல் வெளி வந்த வார்த்தைகளுடன் இரு பொட்டுக் கண்ணீரும் அந்த டைரியில் பட்டுத் தெறித்தன.

அன்று வாங்கிய அடியை எழுதின துரை இன்று மாமாவின் பரிவையும் கண்ணீரையும் எழுதாமல் விட்டுவிடுவானா, என்ன?

எதை எழுதினாலும் அதை மீண்டும் ஒரு முறை படித்துப் பாராமல் இருக்க மாட்டார் காந்திஜி. ஒரு முறை சரியாக இருக்கிறதா என்று படித்துத் திருத்தின பிறகுதான் அதை அனுப்புவார்.

—தேசாய்.

அசடு வழிந்தது

த. சேதுராமன்

அன்று சேத்துப்பட்டி எலிமெண்டரி ஸ்கூலில் ஏக அமர்க்களம்! காரணம் யாரோ கல்வி அதிகாரி பள்ளியைப் பார்வையிட வரப் போகிருராம்.

இதுவரை அந்தச் சேத்துப் பட்டி கிராமத்தின் பக்கம் எந்த அதிகாரியும் வந்ததில்லை. இப் போது பள்ளிக்கு அதிகாரி வருவ தால், அவரைப் பார்க்க மாணவ மாணவிகள் ஆவல் கொண்டதில் ஆச்சரியமே இல்லை.

சேத்துப்பட்டியிலிருந்து வெளி யூருக்குச் செல்லும் ராஜபாட்டை யில் அமைந்திருந்தது அந்த எலி மெண்டரி ஸ்கூல்.

வெகுநாளாக வாராத தலையைக் கஷ்டப்பட்டு வாரினர்கள் மாண வர்கள். 'அன்று மட்டுமாவது சட்டைப் போட்டுக்கொண்டு வர வேண்டும். 'தினம்போல் புத்த கத்தைக் கொண்டு வராமல் வந்து விடாதீர்கள்' என்று திருப்பித் திருப்பிப் புத்திமதி கூறியிருந்தார் வாத்தியார்.

வாத்தியாயர் உள்பட எல்லா மாணவ மாணவிகளும் அதிகாரி யின் வரவை எதிர்நோக்கி இருந்த னர். இன்ஸ்பெக்டரைக் காக்காய்ப் பிடிக்கச் சிற்றுண்டிகள் எல்லாம் வாங்கி வைத்திருந்தார். மணி ஓடிக்கொண்டிருந்தது.

பள்ளி வாசலில் 'சர்..ர்'ரென்று ஒரு 'செவர்லெட்' வந்து நின்றது. அதிலிருந்து கண்ணடி சூட், புஷ் கோட் அணிந்த ஒருவர் இறங் கினர்.

"ஏய் வானரங்களா! இன்ஸ் பெக்டர் வந்துட்டார்டா. உஷ்! மூச்சுவிடக் கூடாது!" என்று மெதுவான குரலில் எச்சரித்து விட்டு, காரிலிருந்து இறங்கிய வரை வரவேற்கச் சென்ருர்.

வாத்தியார்: டேய் ராமு, கடவுள் உன் முன் வந்து உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டால் என்ன செய்வாய்?

ராமு: பணம் வேண்டும் என் பேன்.

வாத்தியார்: போடா முட்டாளே, நானு யிருந்தால் அறிவு வேண் டும் என்பேன்.

ராமு: யார் யாருக்கு எது எது இல்லையோ அதைத்தானே ஸார் கேட்பார்கள்.

வாத்தியார்: ? ? ?

"வாங்கோ! வாங்கோ, ஸார்!" என்று வரவேற்றார்.

"ஸார்...." என்று ஏதோ சொல்லவந்த இன்ஸ்பெக்டரைக் குறுக்கிட்டார்.

"இப்பவே பள்ளியைப் பார்வையிடணும்னு தானே சொல்ல வறேள்; எல்லாம் இருக்கட்டும், ஸார்; முதல்லே டிபனை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவரைப் பேசவிடாமல் அழைத்துப் போய், சிற்றுண்டி கொடுத்து உபசரித்தார்.

வந்தவர் சிற்றுண்டியை முடித்துக்கொண்டார். வாத்தியார் பேச்சை ஆரம்பித்தார்.

"ஸார், பையன்கள் கொஞ்சம் சேட்டைதான்; ஆனால் படிப்பில் சூடிகை! கொஞ்சம் மனசு வச்சு நல்ல 'ரிப்போர்ட்'டா எழுதிட்டுப் போங்க, ஸார்."

"என்ன? ரிப்போர்ட்டா? எதற்கு?" என்றார் வந்தவர் ஒன்றும் புரியாமல். "என்ன? நீங்க கல்வி அதிகாரி இல்லையா?" என்று மென்று விழுங்கினார், வாத்தியார்.

"இல்லை, ஸார், இல்லை! நான் இந்த வழியாகப் பட்டணம் போறேன், காரிலே. 'இங்கே எங்கேயாவது பக்கத்திலே ஹோட்டல் இருக்குமா?' என்று உங்களை விசாரிக்கத்தான் வந்தேன். நீங்க என்னடான்னா, பலவந்தமா 'டிபன்' சாப்பிடச் சொல்லி விட்டீர்கள்! பசி பறந்து போச்சு; உங்களுக்கு ரொமப 'தாங்ஸ்' ஸார்!" என்று வந்தவர் சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, காருக்குச் சென்றுவிட்டார்.

வாத்தியார் முகத்தில் அசடு வழிந்தது!

குப்பு வாத்தியார்

டி. வி. ரங்கசாமி

"ஏன் ஸார், நம்ப குப்பு வாத்தியார் நாலு நாள் முன்னே போயிட்டாராமே? உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் ராமண்ணா.

"அடேடே! அப்படியா சங்கதி. எனக்குத் தெரியவே தெரியாதே. தங்கமான மனுஷன்! இந்தவூர்ப் பள்ளிக்கூடத்துக்கு எப்படி உழைச்சார், தெரியுமா?" என்றார் அப்பண்ணா திடுக்கிட்டுப் போய்.

"பள்ளிக்கூடத்துக்கு உழைச்சது பெரிசல்ல ஸார். என் பையன் கோபு இருக்கிறானே, அவனுக்குக் கணக்கு பாடம்னா வேம்புதான். இவனை எப்படிடா கணக்கிலே முன்னுக்குக் கொண்டு வரதுன்னு வழி தெரியாமல் குப்பு வாத்தியாரிடம் டியூஷனுக்கு அனுப்பினேன். மாசம் நான் பத்து ரூபாய்தான் கொடுத்து வந்தேன். அவர் எப்படிதான் என் பையனுக்குக் கற்றுக் கொடுத்தாரோ தெரியவில்லை. வருஷா வருஷம் கணக்கிலே ஐந்து மார்க்குக்கு மேலே வாங்காதவன் இந்த வருஷம் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து மார்க் வாங்கிட்டான் ஸார். எனக்கே ஆச்சரியமாகயிருந்தது! பார்த்தேளா நம்ப குப்புவின் டியூஷனை?" என்றார் ராமண்ணா.

"ஆமாம்; அந்தக் குப்பு வாத்தியாரைப்போல டியூஷனுக்கு ஆள் அகப்படாது ரொம்பக் கஷ்டம். வீண் படாடோபம் கிடையாது. பாவம், பெரிய சம்சாரி. அந்த மூணு பெண்களுக்கும் கல்யாணத்தைப் பண்ணிவிட்டுப் போகக்கூடாதோ? அது சரி, மேற்கொண்டு செலவுக்கு ஏதாவது பணம் வைத்துவிட்டுப் போனாரா?" என்று கேட்டார் அப்பண்ணா.

"யாருக்கு ஸார், மேற்கொண்டு செலவு என்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே."

"அதான் ஸார், நம்ப குப்பு வாத்தியார் செத்துப் போயிட்டாரே, அதுக்குக் கேட்டேன்."

"நம்ப குப்பு வாத்தியார் செத்துப் போயிட்டாரா? யார் அப்படிச் சொன்னது?" என்றார் ராமண்ணா.

"நீர்தானே என்னிடம் முதலில் சொன்னீர், நம்ப குப்பு வாத்தியார் நாலு நாள் முன்னே போயிட்டார் என்று?"

"அட ராமா! அர்த்தத்தை அநர்த்தமாக்கிவிட்டீரே. அவர் சாகவுமில்லை, ஒன்றுமில்லை. அவரை இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்திலிருந்து வேறூர் ஊருக்கு மாற்றிவிட்டார்களாம். அதனால் நாலு நாள் முன்னால் ஊரை விட்டுப் போய்விட்டதையல்லவா உம்மிடம் சொன்னேன்?" என்று கூறிவிட்டு ராமண்ணா கொல்லென்று நகைத்தார். அப்பண்ணா அசடுவழியச் சிரித்தார்.

கி. சுந்தரேசன்

'டண்..டண்..' என்று பள்ளிக்கூட மணி ஐந்து முறை அடித்து ஓய்ந்தது. மிரண்ட மாடு கண் மூக்குத் தெரியாமல் ஓடுவதுபோல் பையன்கள் எல்லாரும், 'ஆ-ஊ' என்று கத்திக்கொண்டு வெளியேறினார்கள்.

"டேய் சுண்டு, அதோ பார்டா, பாபு!'' என்று கூவினான் சோமு.

"பாபுவா? அவன் பெரிய பயந்தாங்கொள்ளின்னா? அம்மா மடியைவிட்டு இறங்கமாட்டானே! ஒரு சினிமா..டிராமா? ஊஹூம்..கிடையாது'' என்று கேலியாகப் பேசினான் சுண்டு.

"பாபு...பாப்பா தாண்டா'' என்று பக்கவாத்தியம் வாசித்தான் கிட்டு.

"டேய், பாபு..பாபு! சினிமாவுக்கு வர்றியாடா? நாங்கள் போகப் போகிறோம்'' என்று செவிடனைக் கைதட்டி கூப்பிடுவதுபோல் அழைத்துக் கேட்டான் சோமு.

இதையெல்லாம் கேட்கக் கேட்கப் பாபுவுக்குப் பெரிதும் அவமானமாய் இருந்தது.

'நம்மை ஒத்த பையன்கள் சினிமா, டிராமா என்று எவ்வளவு உல்லாசமாய் இருக்கிறார்கள்! ஆனால் நான்..? பயந்துகொண்டு வீட்டிலேயே இருக்கிறேன்! அப்பா ஊரில் இல்லை. இப்போது அம்மாவைக் கேட்டால்..? தாராளமாய் அனுப்புவாள். ஒருவருக்கும் தெரியாமல் சினிமாவுக்குப் போவது, அங்கே தியேட்டரில் இவர்களைச் சந்தித்துப் பிரமிக்கச் செய்வது' என்று எண்ணியவனாய் வீட்டை நோக்கி நடந்தான் பாபு.

வீட்டிற்கு வந்ததும் பாபு ஓடிப்போய்த் தாயைக் கட்டிக்கொண்டு, "அம்மா! என் நண்பர்கள் எல்

லாரும் சினிமாவுக்குப் போகிறூர்கள். எனக்கும் ஆசையாயிருக்கு. போயிட்டு வந்துடறேன், அம்மா'' என்று கெஞ்சினுன்.

'இது இயற்கையான ஆசைதானே! தகப்பனுர் வந்தால் உண்மையில் அனுப்பத்தான் மாட்டார். அவன் என்றுதான் சந்தோஷமாக ஓர் இடத்துக்குச் செல்வது?' என்றுதான் அவன் தாய் எண்ணினுள்.

''பாபு, இந்தா பணம்! ஜாக்கிரதையாகச் சிநேகிதர்களுடன் போய்ச் சினிமா பார்த்துவிட்டு, வா'' என்று கையில் ஒரு ரூபாய்ப் பணத்தையும் கொடுத்து அனுப்பினுள்.

பாபுவின் சந்தோஷத்துக்கு எல்லையே இல்லை. துள்ளிக் குதித்தான். டீக்காக உடை அணிந்து கொண்டான். போலீஸ்காரன் தடியைப் போல் ஒரு தடியையும், டார்ச் லைட்டையும் பாதுகாப்பாகக் கையில் எடுத்துக்கொண்டு தைரியமாகக் கிளம்பினுன்.

மணி ஐந்தரையாகி விட்டது. 'இன்னும் அரைமணி நேரத்தில் படம் ஆரம்பமாகிவிடும்' என்றதும் பாபு ஜன நடமாட்டமே இல்லாத தோப்புக்குள் இரைக்க இரைக்கப் பெருநடையாக நடந்தான். மரங்களின் அடர்த்தி வெளிச்சத்தை எல்லாம் விழுங்கி எப்பமிட்டு இருளைக் கக்கி, பயங்கரமாகக் காட்சியளித்தது.

குளு குளுவென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. காற்றில் அசையும் தென்னை மட்டைகள் 'கிளக்...கிளக்' என்ற சப்தத்தைக் கிளப்பியது. பறவைகளின் கூச்சல் வேறு காதைப் பிளந்தது. இந்தச் சூழ்நிலை பாபுவின் மனத்தில் பீதியைக் கிளப்பிற்று. சூடு அதிகரிக்க அதிகரிக்க ஜுரம் ஏறுவதுபோல் பயம் அதிகமாக அதிகமாக அவன் உடலெல்லாம் வெலவெலத்தது. முகமெல்லாம் வேர்த்துக்கொட்டியது.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ ''கொர்ர்..புர்ர்..'' என்ற சப்தம் காதைக் குடைந்தது. அதைத் தொடர்ந்து, ''ஐயோ..அப்பா..! செத்தேன்..!'' என்ற ஓலக்குரல் வர வரப் பெரிதாகக் கேட்டது.

பாபுவுக்குக் கை, கால்கள் எல்லாம் உணர்வையே இழந்துவிட்டன. ஒன்றுமே தோன்ருமல் ஒரு கணம் விழித்தான். ஏதோ ஓர் ஆபத்து என்றுமட்டும் அவனுக்கு விதரிசனமாகத் தெரிந்தது. 'சினிமாவுக்கு வந்தது எவ்வளவு முட்டாள்தனம். எப்படியாவது வீடு போய்ச் சேர்ந்தால் போதும். ஆண்டவனே, என்னைக் காப்பாற்று!' என்று எண்ணியவாறு அருகிலிருந்த மரத்தின்மேல் ஏறினுன். சுற்று முற்றும் பார்த்தான். ''ஐயோ..அம்மா! புர்ர்ர்..ர்ர்.!'' என்று இனம் புரியாத சத்தங்கள் கேட்டன.

பாபு ஆடாமல் அசையாமல் மரத்தின்மேல் உட்கார்ந்திருந்தான். அவன் யோசனை எல்லாம் இந்தச் சத்தம் எங்கிருந்து கேட்கிறது என்பதில்தான் சென்றது.

அடுத்த விநாடி!

'பொத்' என்று சப்தம் மரத்தடியில் கேட்டது. கிளைதான் முறிந்து விழுந்திருக்குமோ என்று குனிந்து பார்த்தான்.

என்ன பயங்கரம்! ஒரு சிறு பெண்! மரத்தடியில் உணர்வற்றுக் கிடந்தாள். பக்கத்தில் நீண்ட கொம்புகளுடன் ஒரே

கறுப்பாக ஓர் எருமை நின்று கொண்டிருந்தது. ஆம்! அதுதான் அவளை முட்டித் தூக்கி எறிந்திருக்கவேண்டும்..!

“பாபு, பயந்தாங்கொள்ளிடா” என்ற அவமானச் சொல் ஒரு கணம் அவன் காதில் ஒலித்தது. ஆனால் அடுத்த கணம்..?

கையிலிருந்த டார்ச் லைட்டை அடித்து, ‘ஊ ஊ’ என்று அலங்கோலமாக இரைந்து கத்திக் கொண்டே கையிலிருந்த தடியை அந்தக் காட்டெருமையைக் குறி பார்த்து வீசினான். ‘படீர்’ என்று தடி எருமையின் முகத்தில் வந்து தாக்கவே அது ஒரே ஓட்டம் பிடித்துவிட்டது.

‘அப்பாடா!’—பெருமூச்சுவிட்டான் பாபு. பயம் என்ற உணர்ச்சியின் ஓர் அணுக்கூட அவன் மனத்தில் இப்பொழுது கிடையாது. மெதுவாக மரத்திலிருந்து இறங்கி வந்து அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

ஹா...!

பத்து அடி பின்வாங்கி வாயைப் பெரிதாகப் பிளந்தான்பாபு. காரணம் அந்தப் பெண் பிரபல மிராசுதார் கிருஷ்ணசாமி பிள்ளையின் பெண் லீலா தான்! விவரம் புரியாது தவித்தான் பாபு. கைக்குட்டையை எடுத்து அவள் முகத்தை எல்லாம் துடைத்தான். அவள் தன் நினைவின்றிக் கிடந்தாள். தோப்பின் ஓரமாக ஒரு குளம். பக்கத்தில் புதர். பாபு கைக்குட்டையை நனைத்துவரக் குளத்தில் இறங்கிய போது புதருக்குப் பின்னே பேச்சுச் சத்தம் கேட்டது. பாபு உற்றுக் கேட்டான். பேச்சுக்குரல் நின்றதும் பாபு லீலாவை அங்கேயே விட்டு விட்டுத் தலை தெறிக்க எங்கேயோ ஓட்டம் பிடித்தான்.

* * *

பொழுது விடிந்தது. மிராசுதார் வீடு அல்லோலகல்லோலப் பட்டது. இரவெல்லாம கண் விழித்து அவர் கண்கள் சிவந்து போயிருந்தன. ஆட்கள் பரபரப்புடன் போய்க்கொண் டிருந்தார்கள்.

‘மிராசுதார் பெண் லீலாவைக் காணோம். ஏராளமான நகை போட்டிருந்தது. நகை போனாலும் பெண் கிடைத்தால் போதும்’ என்ற பேச்சே அந்த ஊர் முழுவதும் எதிரொலித்தது.

தகப்பனார்: ஏண்டா, ராஜு, ராத்திரிகூடக் கண்ணாடியைப் போட்டுண்டே தூங்கறே..?

ராஜு: அடுத்த வாரம் பரீட்சை. எங்கே அப்பா தூக்கம் வரப் போறது கண்ணை மூடினா உடனே இந்தப் பாடம்தான் கண்ணிலே தோணுது. அதனாலே தினம் கண்ணாடியையும் போட்டுண்டே தூங்கறேன், அப்பா!

—V. வெங்கடரமணன், மதுரை.

அந்தச் சமயத்தில், "இதோ லீலா!" என்ற குரல் எழுந்தது. உடனே, "எங்கே, எங்கே?" என்று பதட்டத்துடன் மிராசுதார் உள்ளிருந்து ஓடி வந்தார்.

பாபு லீலாவைத் தோளில் தாங்கியவாறு பங்களாவை நோக்கி வந்துகொண்டிருந்தான். எல்லாரும் ஓடிவந்து லீலாவையும் பாபுவையும் சந்தோஷ மிகுதியால் தூக்கிக்கொண்டு வந்தார்கள். பாபு பதிலே பேசாமல் நேராக டாக்டர் வீட்டை நோக்கி ஓடி, டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தான். டாக்டர் வந்து மருந்து கொடுத்தார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் லீலா மெதுவாகக் கண் விழித்தாள்.

பிறகுதான் பாபு எல்லா விஷயங்களையும் ஆதியோடந்தமாகச் சொல்ல ஆரம்பித்தான்.

அந்தச் சமயத்தில்..

"மிராசுதார், ஸார். இந்த நகைகள் எல்லாம் உங்களுடையதுதானா?" என்று கேட்டபடியே ஸப் - இன்ஸ்பெக்டர் நாகரத்தினம் உள்ளே நுழைந்தார்.

மிராசுதார் இன்ஸ்பெக்டரை வரவேற்று நகைகளையும் வாங்கிப் பார்த்தார். எல்லாம் என்னவோ கனவில் நிகழ்வது போலப் பட்டது அவருக்கு.

"ஆமாம், ஸார். எங்கள் லீலாவினுடையதுதான். இதை எப்படி..நீங்கள்...கொண்டுவந்தீர்கள்?" என்றார் மிராசுதார்.

"எல்லாவற்றிற்கும் இந்தப் பையன்தான் ஸார், காரணம். உங்கள் மகளைப் படுக்க வைத்துவிட்டு இவன் குளத்துக்குப் போயிருக்கிறான். அப்பொழுது இரண்டுபேர் நகைகளைப் பங்கு போட்டுக் கொள்வதைக் கேட்டுவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிவந்து போலீஸ் ஸ்டேஷனில் சொன்னான். திருடர்களைப் போய்க் கையுங் களவுமாய்ப் பிடித்துக் கொண்டுவந்தோம். இவன் லீலாவை அழைத்து வந்துவிட்டான். பலே சுட்டிப் பயல் ஸார்!" என்று கூறி முடித்தார் ஸப் இன்ஸ்பெக்டர்.

"வீரன் பாபு!" என்ற கோஷத்தை வாசலில் எழுப்பினார்கள் நண்பர்கள். 'பயந்தாங்கொள்ளி' என்ற அதே வாய்தான் இந்தக் கோஷத்தை எழுப்பியது.

வீனஸ்

சுக்கிரன்

எழுதியவர்கள் :

பெ. நா. அப்புஸ்வாமி,

ஜே. பி. மாணிக்கம்

ஒரு நாள் இரவில் சுமார் ஏழு மணி இருக்கும். கண்ணனும் ராதாவும் புரொபஸர் விஞ்ஞானத்தின் வீட்டுக்கு வந்தார்கள்.

“முன்னால் ஒரு புதன்கிழமையன்று புதனைப்பற்றிச் சொன்னீர்கள். இன்று வெள்ளிக்கிழமை!” என்று தொடங்கினான் கண்ணன்.

“சரி, இன்றைக்குச் சுக்கிர வாரம். அதனால் சுக்கிரனைப் பற்றிச் சொல்லுங்கள், ஸார். பாட்டியும் இதோ வருகிறாள்” என்றாள் ராதா.

“புதனைப்பற்றிச் சொல்லியாகிவிட்டது. அடுத்தாற்போல் சுக்கிரனைப் பற்றித்தான் சொல்வதாக இருந்தேன். இன்று நாளின் பெயரும் பொருத்தமாக அமைந்திருக்கிறது!

“சுக்கிரனைத் தெரியாதவர்கள் ஒருவரும் இருக்கமுடியாது. சூரியனுக்கும் சந்திரனுக்கும் அடுத்தபடியாக, வானத்திலே மிகவும் பிரகாசமாகத் தோன்றுவது அதுதான்..” என்றார் விஞ்ஞானம்.

“ஓகோ, அதுதானா? நான் பார்த்திருக்கிறேனே! மேற்கே பிரகாசமாகத் தெரியுமே. இப்பொழுது வெளியே வந்தால் நான் காட்டுவேன்” என்றாள் ராதா.

விஞ்ஞானம் சிரித்துக்கொண்டு, “உன்னால் முடியாது” என்றார்.

“இதோ” என்று வெளியே ஓடினாள் ராதா. இரண்டு நிமிஷத்தில் உள்ளே வந்து, “அது என் கண்ணுக்குத் தெரியவில்லை” என்று வருத்தத்தோடு சொன்னாள்.

“பகவான் அல்லவா? மறைந்துவிட்டார் போலிருக்கிறது” என்றாள் பாட்டி.

“ராதா சொன்னது ஓரளவு சரி. இந்த வருஷம் ஜனவரி மாதம் முதல் மார்ச்சு மாதம் வரையில் சுக்கிரன் முன்னிரவில் மேற்கே பிரகாசமாய்த் தோன்றிக்கொண்டிருந்தது. ராதா அதைப் பல தடவைகளில் பார்த்திருப்பாள். ஆனால், அது ஒரு நாளும் நாலு மணி நேரத்துக்குமேல் தோன்றுவதில்லை. இந்த மாதம் முழுவதும் அது கண்ணுக்கே தெரியாது. மே முதல் அக்டோபர் மாதம்வரையில் அது கிழக்கே தோன்றும். கிழக்கே தோன்றும்போது அதற்கு ‘விடி வெள்ளி’ என்று பெயர்!”

“நான் அதை விடியற்காலத்தில் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன்” என்றாள் பாட்டி.

“ஸார், சில காலம் சுக்கிரன் மாலையிலும் சில காலம் காலையிலும் தோன்றுகிறது என்றீர்களே. அது ஏன்?” என்றான் கண்ணன்.



"புதனும் அப்படித்தானே?" என்றாள் ராதா.

"ஆம். இரண்டுக்கும் காரணம் ஒன்றுதான். புதன், சுக்கிரன் இரண்டும் சூரியனைச் சுற்றி ஓடுகின்றன. அவை இரண்டும் ஓடி வரும் பாதைகள் சூரியனைச் சுற்றி, பூமி ஓடிவரும் பாதைக்கு உள்ளடங்கி யிருக்கின்றன. இந்தப் படத்தைப் பாருங்கள். பூமி, சுக்கிரன் சூரியனைச் சுற்றி ஓடிவரும்போது அது இருக்கும் இடங்களையும் அதன் தோற்றத்தையும் இது காட்டுகிறது. சூரியனுக்கு ஒரு புறத்தில் இருக்கும்போது அது மேற்கே தோன்றுகிறது; சூரியனைவிட்டு ஒதுங்கி எதிர்ப்புறம் வரும்போது கிழக்கே தோன்றுகிறது. சூரியனுக்கு அருகில் வரும்போது, சூரிய ஒளியில் மங்கி, கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்துபோகிறது."

"சந்திரன் அமாவாசையில் மறைந்து போவது போலவா?" என்றான் கண்ணன்.

"ஆம். சுக்கிரன் வேறு வகைகளிலும் சந்திரனை ஒத்திருக்கிறது. சுக்கிரனுக்குச் சுயமாக ஒளியில்லை. சூரிய ஒளியைப் பிரதிபலிப்பதாலேயே அது வெள்ளிபோல் தோன்றுகிறது. சுக்கிரனுக்கும் கலைகள் உண்டு."

"புதனுக்கும் உண்டு, அல்லவா?" என்றாள் ராதா.

"ஆம், ஆனால் சந்திரனுக்கும் சுக்கிரனுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது."

"ஒன்று கிரகம். மற்றொன்று சந்திரன்" என்றாள் ராதா.

"பேஷ்! ஆனால் அதைச் சொல்ல வரவில்லை. முழு வடிவமாக இருக்கும்போதுதான் சந்திரன் மிகப் பிரகாசமாக இருக்கும். பிறை வடிவமாக இருக்கும்போதுதான் சுக்கிரன் மிகப் பிரகாசமாகத் தோன்றும்."

"இது என்ன விபரீதமாக இருக்கிறதே. ஏன் இப்படி?"

"சுக்கிரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே இருக்கும்போது பிறை வடிவமாகத் தோன்றும். அப்போது அது நம்மிடமிருந்து சுமார் இரண்டரைக் கோடி மைல் தூரத்தில் இருக்கிறது. அப்போது அது பிரகாசமாகத் தெரியும். சுக்கிரன், சூரியனுக்கு அப்பால் இருக்கும்போது அது நிறைவடிவாக இருக்கும்.

அப்போது அது சுமார் பதினுறு கோடி மைல் தூரத்தில் ஒதுங்கிப் போய் விடுகிறது. அது கிட்ட உள்ள தூரத்தைப்போல் இது ஆறேகால் மடங்கு அதிகம். ஆதலால் அது சிறிதாகவும் ஒளி குறைந்தும் தோன்றும்.

"சுக்கிரனுக்கு உள்ள கலைகளை வெறும் கண்ணுல் பார்த்தால் தெரியாது. தூரதிருஷ்டிக் கண்ணுடியின் வழியாகப் பார்த்தால் நன்ருகத் தெரியும். அதன் நிறம் மஞ்சள் கலந்த வெள்ளை. அதைச் சுற்றி ஒரு மேக மண்டலம். இந்த மண்டலம் எப்பொழுதும் சுக்கிரனை மறைத்திருக்கும். அதனுல், சுக்கிரனுடைய உண்மைத் தோற்றத்தைக் காண முடிவதில்லை.

"அந்த மேகங்களின் இடையே சிற்சில மங்கலான பகுதிகளும், சிற்சில ஒளிமிகுந்த புள்ளிகளும் காணப்படுகின்றன. இங்கிருந்து இவைகளைத் தவிர வேறு ஒன்றும் அதில் தெரிவதில்லை."

"சுக்கிரன் பூமியைவிடப் பெரிதா, சிறிதா?" என்ருன் கண்ணன்.

"இரண்டும் கிட்டத்தட்ட ஒரே அளவு. சுக்கிரன் சற்றே சிறியது. சுக்கிரனின் குறுக்களவு சுமார் 7600 மைல்; பூமியின் குறுக்களவு சுமார் 8000 மைல். பூமிக்கு ஒரு சந்திரன் இருக்கிறது. சுக்கிரனுக்குச் சந்திரன் கிடையாது. சுக்கிரன் நொடிக்கு 22 மைல் வீதம் ஓடுகிறது. அப்படி அது சூரியனை ஒரு முறை சுற்றி ஓட 225 நாட்கள் ஆகின்றன."

"ஆகையால், அங்கே ஒரு வருஷம் என்பது 225 நாளா?" என்ருன் கண்ணன்.



சுக்கிரனின் பிறைகள்

"நம்முடைய கணக்குப்படி 225 நாள். ஆனால், சுக்கிரனின் நாள் கணக்குப்படி இல்லை" என்றார் விஞ்ஞானம்.

"அது என்ன? விளங்கவில்லையே!" என்றாள் பாட்டி.

"சுக்கிரன் தன்னைத் தானே ஒரு முறை சுற்ற, எவ்வளவு காலம் ஆகிறது என்று இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. அங்கே ஒரு நாள் என்பது நமது முப்பது நாளுக்கு, அதாவது ஒரு மாதத்துக்குச் சரி. அங்கே சந்திரன் இல்லாதபடியால், அங்கே மாதம் என்பது கிடையாது. சுக்கிரனின் ஒரு வருஷம் என்பது சுக்கிரனின் நாள் - கணக்குப்படி சுமார் 8 நாளேயாகும்.

"சுக்கிரன் கண்ணுக்கு அழகாகத் தோன்றுகிறது. நமது நாட்டிலே அதை 'வெள்ளி' என்றார்கள்; அசுரர்களின் குரு என்று பாராட்டினார்கள். கிரேக்க நாட்டில் அதை அழகுத் தெய்வம் (Venus) என்று கொண்டாடினார்கள். நமது நாட்டில் உள்ள புராணக் கதைகளைப் போல் அங்கும் அழகுத் தெய்வத்தைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன.

"இனி ஞான ரதத்தில் போய்ப் பார்ப்போம்.

"இதோ வந்துவிட்டோம் சுக்கிர மண்டலத்தின் அருகில்! இங்கே மேகம் அடர்ந்து தெரிகிறது, பாருங்கள். இந்த மேக மண்டலம் பூமியிலுள்ளது போல் நீராவியினால் அமையவில்லை. இதில் தூசி அதிகம்; கார்பன்-டை-ஆக்ஸைடும் ஏராளமாக இருக்கிறது. இந்த வாயு மண்டலம் நெடுந்தூரம் பரவி யிருக்கிறது. இதில் ஆக்ஸிஜனும் நீராவியும் இல்லை.

"மேகங்களின் இடையே பிரகாசமாகத் தோன்றும் இடங்களைப் பாருங்கள். இவை பனி மூடிய மிக உயரமான மலைகளின் உச்சிகள் என்பது தெரிகிறதா? ஆனால், இந்தப் பனிக்கட்டி உறைந்த தண்ணீர் அன்று. நமது பூமியிலிருந்து தோன்றுவதைவிடச் சூரியன் கிட்டத்தட்ட இருமடங்குப் பெரிதாகவும், மிகப் பிரகாசமாகவும் தோன்றுகிறது.

"இங்கேயிருந்து நம் பூமியை வெறும் கண்ணால் பார்த்தால், பூமியிலிருந்து சுக்கிரன் தோன்றுவதைப் போலவே தோன்றுகிறது. இந்த டெலிஸ்கோப்பினால் பூமியைப் பாருங்கள். இதோ பூமியில் ஒரு பாதி மேகங்களால் மூடியது போல் தோன்றுகிறது. அந்த மேகங்கள் ஒளியை நன்றாகப் பிரதிபலிப்பதால், பூமியில் ஒரு பகுதி மிகவும் பிரகாசமாகத் தோன்றுகிறது. வேறு இடங்களில் பூமி மங்கலாகத் தெரிகிறது. பூமத்திய ரேகையைச் சுற்றியும் மேகங்கள் தெரிகின்றன. பூமியின் துருவங்கள் இரண்டும் வெள்ளிபோல் பிரகாசிக்கின்றன.

"பூமியின் அருகில் மஞ்சள் நிறமுள்ள சிறு புள்ளி ஒன்று தெரிகிறதே, அதுதான் நம் சந்திரன்.

"இனி மேக மண்டலத்துக்குக் கீழே போவோம். எப்பொழுதும் இங்கே மந்தாரமாகவே இருக்கிறது. இடையிடையே மேகங்கள் எப்பொழுதாவது விலகும்போது மட்டும் சூரியன் பளிச்சென்று பிரகாசமாகத் தோன்றுகிறது. இது இங்கேயுள்ள அற்புதக் காட்சிகளில் ஒன்று. பூமியில் தெறிக்கும்

மின்னலை விட இங்குள்ள சூரிய காந்தி அதிகப் பிரகாசமானது.

"இங்கிருந்து பார்த்தால், மேக மண்டலம் மறைப்பதால், பூமி தெரிவதே இல்லை.

"இந்தப் பக்கம் சுக்கிரனின் பகல் நேரமாக இருக்கிறது. இங்கே வெப்பம் அதிகம். சராசரி வெப்பம் 66 டிகிரி சென்டிகிரேடுக்குக் குறைவில்லை. சுக்கிரனின் மையரேகைப் பகுதியில் உள்ள வெப்பம் இன்னும் 20 அல்லது 30 டிகிரி அதிகமாக இருக்கும். அதாவது, கிட்டத் தட்ட நீரின் கொதிநிலை அளவுள்ளதாக இருக்கும். துருவப் பிரதேசத்தில் பனிக்கட்டியின் உறைநிலை வரை வெப்பம் இறங்குவதில்லை.

"சுக்கிரனின் மறுபக்கத்தில் இப்பொழுது இரவு. அங்கே குளிர் நடுக்கும். பனிக் கட்டியின் உறைநிலையைக் காட்டிலும் 30 டிகிரி குறைவாக உள்ள அந்தப் பக்கத்தை நினைத்தாலே குளிரும் போல் இருக்கிறது.

"சுக்கிரனும் பூமியும் கிட்டத் தட்ட ஒரே அளவுள்ளவை. ஆகையால் இங்கே நிறுத்துப் பார்த்தால் நமது எடை அதிகம் குறைந்து போகாது. நூற்றுக்குப் பத்து விகிதமே குறையும். சற்றே சுறு சுறுப்பாக நடக்கவோ, ஓடவோ முடியும்.

"இங்கே நீராவியில்லை; ஆக்ஸிஜனும் இல்லை. வெயில் அடிக்கும் போது உடல் வெந்துபோகும்; இரவில் உடல் உறைந்து போகும். ஆகையால், இங்கே மனிதரோ, மனிதரைப் போன்றவரோ வாழ முடியாது.

"ஆனால், இங்கே ஏராளமாகக் கார்பன்-டை-ஆக்ஸைடு இருப்பதால், எங்கேயாவது தாவரங்கள் இருக்கக் கூடும். பூமியில் பழங் காலத்தில் இருந்த தாவரங்களையும் பிராணிகளையும் போன்ற தாவரங்களும் பிராணிகளும் இங்கே இருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள்."

கண்ணன் சிரித்துக் கொண்டே, "சரி திரும்பிப் போகலாமா?" என்றான்.

"போக வேண்டியதுதான்" என்றார் புரொபஸர்.

சுக்கிரனில் ஓர் இயற்கைக் காட்சி.

பிஸினஸ் புலி

ராஜா

காட்சி 1

பாத்திரங்கள்: பிச்சையப்ப முதலியார், அவர் மனைவி பொன்னம்மாள், ஒரு பழைய காகித வியாபாரி.

இடம்: முதலியார் வீடு.

[பொன்னம்மாள் தன் பருத்த சரீரத்தையும் பொருட்படுத்தாது வீட்டில் உள்ள பெட்டிகளை அங்குமிங்கும் நகர்த்தி, பரண், ஷெல்ப்களிலுள்ள சாமான்களின் மேல் வஞ்சனை இல்லாது வியாபித்திருக்கும் தூசிப் படலத்தைத் தட்டிச் சுத்தம் செய்கிறாள்.]

பொன்னம்மாள்: (சலிப்புடன்) சே, என்ன குப்பை!....என்ன குப்பை!.... பரண்லே இருக்கிற குப்பை போறாதுன்னு பழைய காகிதக் கட்டு வேறே!

முதலியார்: (சிறிது ஆயாசத்துடனும் கோபத்துடனும் நசுக், நசுக்கென்று தும்மிக்கொண்டே) அடாடா....டா! ஒட்டடை அடிக்கிறது, வீட்டைச் சுத்தம் பண்ணறது இந்த வேலையெல்லாம் இப்பத்தானா செய்யணும்?..என்ன பொன்னம்மா போ!..எதடாது ஒரு மனுஷன்—அதுவும் ஒரு பிஸினஸ்மேன் வெயில் வேளையிலே அலுப்பா ஒரு அரை மணி நேரம் ரெஸ்ட்....

பொன்: (இடைமறித்து) ஆமாமா...நீங்க அந்த உள்ளே இருந்தட்டே இவ்வளவு பேசுறீங்க....இந்தப் பழங் கடுதாசுகளெல்லாம் இப்படிக் கட்டி வச்சிருந்தா யாருக்கு வேண்டியிருக்கு? (ஏளனமாக) ஒங்க மூளையே தனியாத்தான் வேலை செய்யுது....

முதலி: (சற்றுக் கோபமாக) பொன்னம்மா, நீ எனக்குச் சம்சாரமா இவ்வளவு வருஷம் இருந்து 'பிஸினஸ்'னா என்னன்னு இன்னும் தெரியல்லே...அது தெரிஞ்சா நீயும் உன் பிள்ளையும்..

பொன்: இதோ பாருங்க.. என்னை என்ன வேணும்னாலும் சொல்லுங்க..பையன் தாண்டவராயனை மாத்திரம் எதுக்கெடுத்தாலும் இழுக்காதீங்க. நான் இப்பவே சொல்லிட்டேன்...இந்தக் குப்பையெல்லாம் நான் வெளியே எறிஞ்சுடப் போறேன்!

முதலி: அடேடே..அப்படியெல்லாம் செஞ்சுடாதே, பொன்னம்மா. அதெல்லாம் ஜாக்கிரதையா நான் எதுக்காக இப்படிச் சேர்த்து வச்சிருக்கேன் தெரியுமோ? பழைய பேப்பர்காரன் கிட்டே போட்டு.. பிஸினஸே தெரியாத......

பொன்: அப்படின்னா அதெல்லாம் முன்னியே போட்டுத் தொலைச்சுடறத்துக்கு என்னவாம்?..இப்பத்தான் நல்ல காலம் வருதோ?..நானும் பார்த்துண்டே இருக்கேன், ஏழு வருஷமா?

முதலி: நீ பாட்டுக்குப் பேசிக்கிட்டே போறியே, வியாபார விவகாரம் ஒண்ணும் தெரியாதபடிக்கு. ஏழு வருஷத்துக்கு முந்தி

பழைய காகிதம் வீசை என்ன விலை? இப்போ......!

போன்: (சலிப்புடன்) போதுமே! ஆயிரமாயிரமா வரதையெல்லாம் விட்டுட்டு...என்னமோ நீங்க செய்யறது ஒண்ணுமே எனக்குப் பிடிக்கல்லே!....

முதலி: பிடிக்கல்லியா?....புரியல்லேன்னு சொல்லு!

(வெளியே ஒரு குரல்)

வியாபாரி: பேப்பர் இருக்குங்குங்களா? பழைய காகிதம்?....

போன்: சரி...சரி; யார் நல்ல காலமோ வாசல்லே பழைய பேப்பர்காரன் போறான்....இப்பவாவது கூப்பிட்டு இந்தக் குப்பையெல்லாம் போட்டு உங்க 'பிஸினஸ்'ஸை ஆரம்பிங்க!

முதலி: எய்..பேப்பர், பேப்பர்!

வியா: கூப்பிட்டீங்களா சாமி?

முதலி: இந்தக் கட்டு என்ன நிறையிருக்கு, பாரு!

வியா: (தராசை எடுத்துக் கொண்டே) காகிதம் ரொம்பப்

பளசா இருக்கும் போலே இருக்கே! (சுவாரசியமற்ற வளுக) வீசை நாலே காலணுக்கு மேலே எடுக்க முடியாதுங்க..

முதலி: வீசை நாலே காலணுவா!

பொன்: (பட்டும் படாமலும்) எழு வருஷத்துக்கு முந்தியே வீசை ஆறணுவுக்கு..

முதலி: (விட்டுக் கொடுக்க மனமில்லாதவராய்) சரி..சரி; நீ..எவ்வளவு வீசை இருக்குன்னு நிறுத்துப் பாருப்பா!

பொன்: (கேலியாக) நல்ல பிஸினஸ்..

முதலி: பொன்னம்மா!..நீ இனிமே இந்த விஷயத்திலே தலை யிடாதே!..உனக்கும் தாண்டவ ராயனுக்கும்தான் 'பிஸினஸ்' விஷயமே..

வியா: மூணு வீசைக்குக் கால் பலம் குறைவா இருக்குங்க!

முதலி: அடேடே!..அந்தக் காகிதத்துக்கு இடையிலே ஒரு புஸ்தகம் இருக்கே, அதை இங்கே எடுப்பா!..அட..நம்ம மடைய ஞர் மன்னுர்சாமி எழுதின துப்பறி யும் நாவல்..அடாடா....டா.. இது இங்கே இருக்கிறது எனக்குத் தெரியாமல் போயிடுத்தே. சரி.. மீதிக் காகிதத்தை யெல்லாம் கட்டி நீ எடுத்துக்கோப்பா..

வியா: மீதின்னு இரண்டு வீசைக்கு மேலே..

முதலி: அதெல்லாம் சரிப்பா.. பன்னிரண்டணுவை முதல்லே கொடுத்துடு..

காட்சி 2

இடம்: பழைய புஸ்தகக்கடை.

பாத்திரங்கள்: கடைக்காரர், ஒரு பெரியவர், ஒரு மாணவன், பிச்சையப்ப முதலியார்.

காலம்: மாலை வேளை.

கடைக்காரர்: (ஒருவரைப் பார்த்து) சார்!..உங்களைத்தான் பெரியவரே!..புஸ்தகங்களை யெல்லாம் ஜாக்கிரதையா எடுத்து 'ஹாண்டில்' பண்ணுங்க.. என்னு எல்லாம் 'செகண்டு காண்ட்' புஸ்தகங்கள்!

பெரி: என் சார்! 'நாக சர்ப்பம்' எழுதின, 'அமிருத அண்டா' இருக்கா?..

கடைக்: ஒரே ஒரு 'காப்பி' தான் சார், இருக்கு. புதுசு வெலை மூணு ரூபாய். உங்களுக்குப் பழைய விலை 'ஹாப்-ரேட்' அதாவது..

நபர்: கிழியாமெ இருக்கா?

கடைக்: இதோ பாருங்க சார்! அச்சிலேந்து வந்தாப்பலே..

மாணவன்: வேதாசலக் கோனர் போட்ட மூணுங்கிளாஸ் சரித்திரப் புஸ்தகம்...

கடைக்: இல்லே, தம்பி!

பள்ளிச்: ஆராவமுதன் போட்ட 'அரித்மெடிக்'..

கடைக்: (சற்றுக் கோபமாக) அந்த மாதிரிப் புஸ்தகமெல்லாம் இங்கே வாங்கி வைக்கிறதில்லே!

முதலி: என் சார், 'கருவண்டின் ரீங்காரம்'ங்கற துப்பறியும் நாவல் இருக்கா?

கடைக்: என்ன, சார்?..கருவண் டின்ரீங்காரமா? யார் எழுதினது?

முதலி: என்ன, சார் இப்படிக் கேக்கிறீங்க! மடையனுர் மன்னுர் சாமி எழுதினதுதான்!

கடைக்: ரொம்பப் பழைய கால நாவலாச்சே!....

முதலி: புதுசா இருந்தா நான் இங்கே என் சார், வறேன்?

கடைக்: இப்போதைக்குக் கை வசம் இல்லே....யாராவது கொண்டு வந்து கொடுத்தா வாங்கி

வைக்கிறேன்...ஏதோ நீங்க நமக்குத் தெரிஞ்சவரா இருக்கிற படியினுலே ஒண்ணு ரெண்டு முன் னேப் பின்னே.....

முதலி: (கடைக்காரரின் காதோடு) இதோ பாருங்க சார்! அந்தப் புஸ்தகம் எப்படியாவது எனக்கு அவசியம் வேணும்.... முந்தியே, அதாவது நாற்பது வருஷத்துக்கு முந்தியே, அதோட புது வெலே எட்டு ரூபாய் போல இருக்கு..இப்ப ரொம்பப் பழசா இருந்தாக்கூடப் பரவாயில்லே.. இதோ பாருங்க, அதே எட்டு ரூபாயானுலும் நான் வாங்கிக்கத் தயார்! அப்படி வேறு எங்காவது எனக்குக் கிடைச்சுட்டாலும் வேறே உங்களுக்குக் கிராக்கி இல்லாமெ போகாது....

கடைக்: அந்தப் புஸ்தகம் இத்தினி நாளா இல்லாமே இப்போ எங்கே சார் வரப்போவுது?..என் னவோ பாப்போம்....

காட்சி 3

இடம்: பிச்சையப்ப முதலியார் வீடு.

பாத்திரங்கள்: பிச்சையப்ப முதலியார், பொன்னம்மாள், வேலேக்காரப் பையன் சோமு, தாண்டவராயன்.

காலம்: நஷ்ட காலம்.

பொன்: சோமு! சோமு! எங்கே சோமுவைக் காணும்?

முதலி: இப்போ சோமுவுக்கு என்ன அவசரம்? நான் தான் அவனேப் புஸ்தகக் கடை வரை அனுப்பிச்சிருக்கேன்!....

பொன்: நீங்க புது வேலேக்குப் பையன் வச்சாலும் வச்சீங்க.. அவனே ஒரு நிமிஷம்..அது சரி.. புஸ்தகக் கடைக்கு ஏன்?

முதலி: எல்லாம் நம்ம மன்னுர் சாமியோட நாவலே விக்கறதுக்குத் தான்...

பொன்: அதுக்கு ஓரணுவுக்கு மேலே தரமாட்டான் பாருங்க..

முதலி: வீணு வளத்தாதே!.. 'பிஸினஸ் நேக்'கே தெரியாத படிக்கு..நீ வேணும்ணு பாரேன். அந்தப் புஸ்தகத்திற்கு அஞ்சு ரூபாய் வரதா இல்லேயான்னு?..

பொன்: அஞ்சு ரூபாயா?

முதலி: ஆமாம்..பொன்னம்மா ஆமாம்! தெரியாமலா வர்த்தகர்கள் மகா நாட்டிலே எனக்குப் 'பிஸினஸ் புலி' பிச்சையப்ப முதலியார்னு பேர் கொடுத்தாங்க?.....

தாண்ட: (சமையலறையிலிருந்து) அம்மா!....அம்மா!

முதலி: சரி...சரி..உன் பிள்ளேயாண்டான் என்னமோ ஆயிரம் ஐந்நூற்றைப் பறிகொடுத்துட்டாப் பலேன்னு கத்தருன்!

தாண்ட: அம்மா! அம்மா! (வருகிருன்) அந்த அகப்பைக் கூட்டிலே ஒரு புஸ்தகம் இருந்ததே!...அது எங்கேம்மா?

பொன்: (சாவதானமாக) என் னத்துக்குடா இவ்வளவு அவசரப் படறே? அதைத்தான் உங்கப்பா புஸ்தகக் கடையிலே வித்து..

தாண்ட: (பதட்டத்துடன்) என்னம்மா! ..நான் அதுலே தானே அப்பா காலேயிலே கொடுத்த செக்கை வச்சிருந்தேன்.

முதலி: என்ன?.. (மூர்ச்சையடைகிருர்.)

சோமு: (வாசலிலிருந்து ஓடி வருகிருன்) சார்!..சார்! அந்தப் புஸ்தகத்தை அஞ்சு ரூபாய்க்கு நீங்க சொன்னுப்பலே வித்துட்டு வந்துட்டேன்!

(திரை)

சரியான கிண்டன்

எஸ். ரங்காச்சாரி

"டேய், பாலசந்திரா! இங்கே வா!" என்றாள் அம்மா.

"என்னம்மா?" என்றான் பாலு.

"டேய், பாலு! சிவாஜிபுரத்திலே ஒரு செட்டியார் எதாவது வேலை தருவதாகச் சொன்னார். நீ போய் அவரிடம் வேலை செய். உன் தம்பி ராஜாமட்டும் இங்கேயே இருக்கட்டும். அவன் சிறு பிள்ளை" என்று அழமாட்டாத குறையோடு கூறினாள். இதைக் கேட்ட பாலசந்திரன், 'பாவம், அம்மா எவ்வளவு கஷ்டப்படுகிறாள்! நாம் எதாவது சம்பாதித்தால் இந்தக் கஷ்டமெல்லாம் என்?' என்று மனத்தில் எண்ணிக்கொண்டே, "சரி, அம்மா நீ கவலைப்படாதே! நாளைக்கே போகிறேன்" என்றான்.

மறுநாள் பாலு விடை பெற்றுக் கொண்டு சிவாஜிபுரம் சென்றான்.

செட்டியாரிடம் வேலை தேடி வந்ததாகக் கூறினான்.

"உன்னை வேலைக்கு வைத்துக் கொள்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை.." என்றார் செட்டியார்.

"நிபந்தனையா? அது என்ன?"

"நீ தினமும் பக்கத்திலுள்ள காட்டுக்குப் போய், ஒரு கட்டு விறகு வெட்டிக்கொண்டு வர வேண்டும். சாப்பாட்டு வேளைக்கு ஒரு இலை சாப்பாடு போடுவோம்" என்றார் செட்டியார்.

இதில் ஒன்றும் கஷ்டம் இருப்பதாகத் தோன்றவில்லை. "மற்றொன்று; நீ வேலையைவிட்டு நிற்கவேகூடாது. அப்படி நிற்பதானல் ஒரு காதை அறுத்து வைக்கவேண்டும்" என்றார் செட்டியார்.

"நீங்களாக நீக்கினல்..?"

"நான் அறுத்து வைக்கிறேன்." இந்த நிபந்தனைகளை இருவரும் எழுதிக் கையெழுத்துப் பெற்றுக் கொண்டனர்.

மறுநாள் காலையில் பாலு காட்டுக்குச் சென்றான். மாலை மூன்று மணிக்கு ஒரு பெரிய விறகுக் கட்டைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்து போட்டான். பிறகு கை கால்களைக் கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். செட்டியாரின் மனைவி உள்ளங்கை அளவுள்ள ஓர் ஆலிலையைப் பறித்தாள். அதில் ஒரு பிடி சாதம் வைத்தாள். இலை நிறைந்துவிட்டது. கொஞ்சம் குழம்பு ஊற்றி, பாலு முன்பு கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய்விட்டாள். பாலுவுக்கு இதைப் பார்த்தவுடன் பகீரென்றது. "இதென்ன அநியாயம்! ஒரு கைக்குழந்தைக்குக்கூட இந்தச் சாப்பாடு போதாதே" என்று செட்டியாரிடம் காண்பித்தான்.

செட்டியார் இதைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார். "என்ன அப்பேன்! பேச்சுன்னு பேச்சுத்தான்! ஒரு இலைச் சாப்பாடு போடுவதாகத் தானே பேச்சு? ஒரு இலைதானே உன் கையில் இருப்பது?" என்றார்.

பாலுவின் வயிறு பகீரென்றது. "அநியாயமல்லவா இது? எனக்கு வேண்டாம் இந்த வேலை" என்று கத்தினன்.

"வேலை வேண்டாம் என்றால் ஒரு காதை அறுத்து வைத்துவிட்டுப் போ அப்பேன்!" என்றார் செட்டியார்.

இதைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு. சிலைபோல நின்றான்.

நாட்கள் சென்றன. தினமும் விறகுக் கட்டைப் போடுவதும் ஒரு வேளைக்கு ஒரு பிடி சாதம் சாப்பிடுவதுமாக இருந்து வந்ததால் அவன் உடம்பு துரும்பாக இளைத்து விட்டது.

ஒரு நாள் தம்பி ராஜா தன் அண்ணனைப் பார்க்க வந்தான். பாலுவை அடையாளம் கண்டு கொள்ளவே சிறிது நேரம் பிடித்தது.

"அண்ணா!" எனக் கட்டிக் கொண்டான். நீர் மல்கிய கண்களுடன், பாலு யாவற்றையும் கூறினன். ராஜா யோசித்தான். "அண்ணா, நீ பயப்படாதே! நான் ஒரு வழி செய்கிறேன்!" என்று செட்டியாரிடம் சென்றான்.

"ஐயா, என் அம்மாவுக்கு ஜுரம். அவளுக்கு எப்பொழுது பார்த்தாலும் பாலுவின் நினைவுதான். ஆகையால் என் அண்ணனை ஊருக்கனுப்ப வேண்டும். அதுவரை நான் வேலை செய்கிறேன்" என்று நயமாகக் கூறினன்.

'பாலுவைவிட இவன் நன்றாக உழைக்கக்கூடும்' என்று நினைத்து, "சரி; அவன் போகட்டும்; ஆனல் அவன் மறுபடி வரவேண்டாம். நீயே இரு" என்றார் செட்டியார்.

"சரி, ஆனல் அந்த உடன்படிக்கையை என் பெயருக்கு மாற்றுங்கள்" என்றான் ராஜா.

உடன்படிக்கையை மாற்றியதும் பாலு ஊர் சென்றான். ராஜா காட்

டுக்குச் சென்றான். சரியாகச் சாப்பாட்டு வேளைக்கு, ஒரு கையில் ஒரு சிறிய விறகுக் கட்டைச் சிரமமின்றித் தூக்கிக்கொண்டு வந்து போட்டான். செட்டியார் கோபத்துடன், "என்ன இது, இவ்வளவு சின்னக் கட்டு கொண்டு வந்திருக்கிறாய்?" என்றார்.

"பேச்சு என்றால் பேச்சுத்தான்! ஒரு விறகுக் கட்டு கொண்டு வர வேண்டும். அவ்வளவுதானே! பெரிதாவது சின்னதாவது! அப்படி ஒன்றும் எழுதித் தரவில்லை" என்று பதில் அளித்தான். அசந்து விட்டார் செட்டியார்.

ராஜா அங்கிருந்து தோட்டத்துக்குச் சென்று முழு வாழை இலை ஒன்றை அறுத்துக் கொண்டு வந்தான். அதைப் போட்டு உட்கார்ந்துகொண்டு, "வரட்டும்சாப்பாடு" என்று உறுமினான். இதைப் பார்த்த செட்டியாரின் மனைவி திகைத்தாள். செட்டியார் தாண்டிக் குதித்தார். "அடே! என்னடா இது! இவ்வளவு பெரிய இலையில் எங்கள் இரண்டு பேர் சாப்பாட்டைப் போட்டால்கூட இலை நிறையாதே?" என்றார்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இது ஒரே இலை! இது நிறையச் சாப்பாடு போட்டுத் தானாக வேண்டும். ஆல இலை என்று நான் எழுதிக் கொடுத்தேனா?" என்று கூறினான்.

"அடேடே! நீ வேண்டாமப்பா வேலைக்கு. நமக்குக் கட்டாது" என்றார் செட்டியார்.

"அதுக்கென்ன? ஒரு காதை அறுத்து இப்படி வையுங்கள்!" என்றான் ராஜா. செட்டியார் திகைத்தபடி எல்லாச் சோற்றையும் இலையில் கொட்டினார். இலை நிரம்பவில்லை.

ராஜா அவ்வளவையும் தின்றுவிட்டான். செட்டியாரும் அவர் மனைவியும் பட்டினி, பாவம்! செட்டியார் காதை அறுத்துக் கொடுப்பதைத் தவிர வேறு வழி ஏதேனும் தெரிந்தால் செட்டியாரிடம் போய்ச் சொல்லுங்கள்!

நாடோடிக் கதை: 2

வெள்ளை மூக்கன்

எஸ். மாலதி

ஓர் ஊரில் சுப்பன் என்று ஒரு மூட வண்ணான் இருந்தான். அவன் புத்தியில் மூடனாயிருந்தாலும் தன் தொழிலை விடாமல் செய்துகொண்டு வந்தான். அவனிடமிருந்த இரண்டு கழுதைகளின் பேரிலும் சுமைகளைப் போட்டுக்கொண்டு தினந்தோறும் துறைக்குச் சென்று வருவான்.

அவன் சென்று வரும் வழியில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் இருந்தது. அவன் துறையிலிருந்து வரும்பொழுது தினந்தோறும் அங்கே சற்று நின்று, 'என்னைப் படிக்க வைக்காததனால்தானே மூடன் என்கிறார்கள்?' என்று சொல்லிக்கொண்டு, வாத்தியாரையும் பையன்களையும் ஏக்கத்துடன் பார்த்துவிட்டு வருவான்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் வழக்கம்போல் கழுதைகளுடன் சுப்பன் நின்றுகொண்டிருக்கையில்

அந்த வாத்தியார் ரொம்பக் கோபத்துடன் ஒரு பையனைத் திட்டினர். "மந்திக் கழுதை! எவ்வளவு சொல்லிக்கொடுத்தாலும் மூளையில் ஏறவில்லை. எவ்வளவு நாட்கள்தான் கழுதையாய் இருப்பாய்? மனிதனாய் என்றுதான் ஆகப்போகிறாயோ?" என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த சுப்பனுக்கு மூளையில் ஒரு யோசனை தோன்றியது. 'இந்த வாத்தியார் பையன்களுக்குத்தான் பாடம் சொல்லிக் கொடுக்கிறார் என்றிருந்தேன். அவர் கழுதைகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு அதை மனிதனாக வேறு ஆக்குகிறாரா? இது இத்தனை நாளாக நமக்குத் தெரியாமல் போய்விட்டதே. அதனால் என்ன? அந்தச் சின்னக் கழுதைக் குட்டி, வெள்ளை மூக்கனை, நாளைக் காலையில் கொண்டு சேர்த்துவிட்டால் போச்சு' என்று சொல்லிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

மறுநாள் காலை வெள்ளை மூக்கனைக் குளிப்பாட்டி, சந்தனம் குங்குமம் இட்டு, கழுத்தில் சரிகை உருமாலும் மாலையும் சுற்றினன். ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், புஷ்பம், பொரி, பொட்டுக்கடலை, குருதட்சிணை முதலியவைகளுடன் ஓட்டிக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வந்தான். "ஏ வாத்தியாரையா!" என்று கூப்பிட்டான். வாத்தியார் இவைகளைப் பார்த்துப் பிரமித்துப் போய், "என்னடா!" என்றார்.

"ஒண்ணுமில்லைங்க, இத்தனை நாளாக் கழுதைங்களுக்குக்கூடப் பாடம் சொல்லிக் கொடுப்பீங்கன்னு எனக்குத் தெரியாமப் போயிடுத்து. நேத்திக்கு நீங்க பிள்ளைகளிடம் சொல்லிக்கொண்டிருந்தீங்களே, அப்பொழுதுதான் தெரிஞ்சுது. அதோடே அந்தக் கழுதைகளை மனிதனாக வேறு செய்யறீங்களா? இது நிஜந்தானா?" என்றான்.

வாத்தியாருக்கு உடனே விஷயம் புரிந்துவிட்டது. இருந்தாலும் ஒரு வேடிக்கை செய்யலாம் என்று நினைத்து, "ஆமாம், இங்கே உட்கார்ந்திருப்பவர்களில் சிலர் கழுதைகளாய் இருந்தவர்கள் தான்" என்றார்.

"அப்படியானால் என் வெள்ளை மூக்கனையும் சேர்த்துக்கொண்டு மனிதனாக்கி, ஒரு நல்ல வேலையும் பண்ணி வச்சுடுங்க!" என்று தட்டை அவர் முன்னால் வைத்து வணங்கி நின்றான்.

தட்டில் இருக்கும் ரூபாயைப் பார்த்தவுடன், வாத்தியாருக்கு ஆசை வந்துவிட்டது. சுப்பனைப் பார்த்து, "சரி, விட்டுவிட்டுப் போ. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.

"அப்போ சாயங்காலம் பத்திரமாய் வீட்டுக்கு அனுப்பிவையுங்க" என்றான் சுப்பன்.

"வீட்டுக்கு அனுப்பினால் அது மனிதனாய் எப்படி ஆகும்? இங்கேயே இருக்கட்டும். நீ மாத மாதம் சம்பளம் மட்டும் கொடுத்து வா. கவலைப்படாமல் போய் வா" என்று அனுப்பிவிட்டு உள்ளே வந்து பையன்களுடன் விழுந்து விழுந்து சிரித்தார்.

சில நாட்களானவுடன், அந்தக் கழுதையை அவர் வேறு ஊர் வண்ணான் ஒருவனுக்கு விற்றுவிட்டார். சுப்பன் மாத மாதம் சம்பளம் கட்டும்போது மூக்கனை ஒரு முறை பார்க்கலாமா என்று



கேட்பான். "ஊஹூம்; அதெல்லாம் கூடாது. நீ இப்பொழுது பார்த்தால் உன்னுடன் வரவேண்டும் என்று முரண்டு பண்ணுவான்" என்று ஏதாவது சொல்லி அனுப்பிவிடுவார் வாத்தியார்.

இப்படியாக ஒரு வருஷத்தை ஓட்டிவிட்டார் வாத்தியார். சுப்பன் அடிக்கடி சென்று மனிதனாகி விட்டானா என்று அரிக்க ஆரம்பித்துவிட்டான். இவன் தொந்தரவு பொறுக்க முடியாமல் ஒரு நாள் வாத்தியார், "மூக்கன் உன்னிடம் சொல்லவில்லையா? அவன் மனிதனாகி ஒரு பெரிய வக்கீலாகப் புதூரில் இருக்கிறானே" என்றார்.

சுப்பனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. "அப்படியா, எனக்குத் தெரியாதே. என் மூக்கனை நான் பார்க்கணுமே. புதூரில் எந்த இடத்தில் இருக்கிறான்? அவன் எப்படி இருக்கிறான்?" என்று கேட்டான்.

"புதூரில், கச்சேரி எங்கிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு போ! கையில் கொஞ்சம் கந்தைத் துணி, காகிதம், வைக்கோல் எல்லாம் வைத்து முன்னே நீ கூப்பிடுவாயே அதே மாதிரி, 'பாபா, வெள்ளை மூக்கா, பாபா, என் குட்டிக் கழுதை!' என்று கூப்பிடு. அத்தனை பேரில், யார் உன் குரலைக் கேட்டவுடன், உன்னிடம் வருகிறானோ அவன் தான் உன் வெள்ளை மூக்கன். அப்புறம் நீ பார்த்துப் பேசி, உன்னுடன் வேண்டுமானால் அழைத்து வா!" என்றார் வாத்தியார். சுப்பன் மறுநாள் வாத்தியார் சொன்னபடியே சாமான்களுடன் நின்று கொண்டு, "பாபா, வெள்ளை மூக்கா, என் குட்டிக்கழுதை!" என்று திருப்பித் திருப்பிக் கூப்பிட்டுக் கொண்டே இருந்தான்.

பத்து மணி சுமாருக்கு வக்கீல்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தார்கள்.

சிலர் யாரோ பைத்தியம் என்று நினைத்துப் பேசாமல் போனார்கள். ஒரு வக்கீல் இவன் விடாமல் கத்துவதைப் பார்த்து, அவனை நோக்கி வந்தார். அவர் வருவதைப் பார்த்த சுப்பன், அவரை ஓடிப்போய்க் கட்டிக்கொண்டு, "நீ மனிதனாகிக் கூட என்னை மறக்கவில்லையே, என் வெள்ளை மூக்கா!" என்று சொல்லி, கன்னங்களில் முத்தம் இட ஆரம்பித்துவிட்டான்.

வக்கீல் பயந்து போய், "ஏ பைத்தியம்! விடுடா, விடுடா" என்று கத்தினர். அதற்குள் இந்த வேடிக்கைப் பார்த்து ஒரு கூட்டம் கூடி விட்டது. இவன் அவரை விடாமல், "உனக்காக நான் எவ்வளவு செலவழித்துப் படிக்க வைத்து மனிதனுக்கினேன். நீ சொல்லிக்கொள்ளாமல் வந்து விட்டதுடன், 'ஏ பைத்தியம், யாரு'ன்னு வேறே கேட்கிருயே? வீட்டுக்கு வாடா, உனக்குச் சொல்லுகிறேன், விசுவாசம் கெட்டவனே!" என்று கையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்தான். வக்கீல் பெரிதாகக் கத்திக்கொண்டு கையை விடுவித்துக்கொள்ளப் பார்த்தார். அவன் மேலும் இவரை விடாமல் இழுக்க அதற்குள், ஒரு சேவகன் வந்து இவர்களை விடுவித்துவிட்டான். அதற்குச் சுப்பன், "என் பிள்ளையை, நான் வளர்த்து மனிதனுக்கிய என் பிள்ளையை, கூப்பிட்டால் உனக்கு என்ன?" என்ருன். வக்கீலோ, "ஐயையோ, நான் உன் பிள்ளையாடா?" என்று அலறினர். இதில் ஏதோ வேடிக்கை யிருக்கிறது என்று நினைத்த சேவகன் சுப்பனைப் பார்த்து, "விஷயம் முழுவதையும் விவரமாய்ச் சொல்" என்ருன். சுப்பன், தன் வெள்ளை மூக்கனை மனிதனுக்க வாத்தியாரையாவிடம் விட்டதிலிருந்து இப்பொழுது கூப்பிட வந்தது வரையில் சொல்லிவிட்டு, "நீங்களே சொல்லுங்க, இவனுக்குக் கொஞ்சமாவது பிரியமிருக்கிறதா? விசுவாசம் கெட்ட பயல்!" என்று சொன்னன். இவைகளைக் கேட்டவுடன் எல்லாரும் இவன் மூடத்தனத்தக்கு இடி இடியென்று சிரித்துவிட்டு, "இனிமேல் இப்படி மடத்தனமாய் நடக்காதே" என்று அவனை விரட்டிவிட்டார்கள்.

சுப்பன், "என்னைத் தெரிந்துகொண்டும் அந்தப் பயல் இப்படி வரமாட்டேன் என்று சொல்லி ரகளை செய்து கூட்டம் கூட்டிவிட்டானே. விசுவாசம் கெட்ட பயல்! என்ன இருந்தாலும் கழுதைப் புத்தி போகுமா?" என்று சொல்லிக்கொண்டு, வருத்தத்துடன் வீடு திரும்பினன்.

காமு: ஏண்டி கப்பு, என் பாண்டிச் சில்லு மட்டும் அடிக்கடி உடைஞ்சுடறது. உன்னுது மட்டும் உடையவே மாட்டேங்கறதே, ஏன்?

கப்பு: ஹூம்; இதென்ன ஓட்டாஞ் சல்லியா என்ன? எங்க வீட்டு மைசூர்ப் பாகாக்கும்!

—R. விசுவநாதன, சீகாழி.

காங்கருக் குட்டி

'அமா'

நான் பிறக்கும்போது எவ்வளவு சின்னவனாக இருந்தேன் தெரியுமா? நான் சொன்னால், நீங்கள் ஒரு நாளும் நம்ப மாட்டீர்கள். உங்கள் அப்பாவின் கட்டை விரல் அத்தனை பருமன் கூட இல்லை. அவ்வளவு நீளமும் இல்லை. அப்போது நான் இரண்டு அங்குல நீளம்கூட இல்லை. உங்களால் இதை நம்ப முடியவில்லை, அல்லவா? என் அம்மாவே எனக்குச் சொல்லியிருக்கிறாள். இல்லாவிட்டால், நானும்கூட இதை நம்பியிருக்க மாட்டேன்.

நீங்கள் சிறு குழந்தைகளாயிருந்தபொழுது, உங்கள் தாயின் மடியில் அல்லது தொட்டிலில் படுப்பீர்கள்; தூங்குவீர்கள். நான் குழந்தையாயிருந்த பொழுது ஒரு சிறிய பையில் வாழ்ந்தேன். என் தாயின் வயிற்றின் தோல் மடிந்து ஒரு பைபோல் அமைந்திருந்தது. அது மிகவும் மெத்தென்றும் இதமாகவும் இருந்தது.

நான் அநேகமாக எப்பொழுதும் அந்தப் பையின் உள்ளேயே இருப்பேன். பசிக்கும்போது பால் குடிப்பேன். மற்ற வேளைகளில் சுகமாகத் தூங்குவேன். இப்படி நாலு மாதம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தேன். இதெல்லாம்

என் தாய் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

நான் பிறந்து நாலு மாதத்திற்குப் பிறகு வெளியில் உள்ளவைகளையும், வெளியே நடக்கும் காரியங்களையும் கவனிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு நீங்கள் வெளியிலுள்ள வேடிக்கைகளைப் பார்ப்பது போல, நானும் பைக்குள்ளிருந்து தலையை வெளியே நீட்டி, எட்டிப் பார்ப்பேன்.

சில வேளைகளில், என் தாய் என்னைக் கீழே இறங்கவிடுவாள். அவளுடைய பக்கத்திலேயே விளையாடுவேன். எங்களுடைய இனத்தார்கள் எல்லாருமே மிகவும் பயந்த சுபாவம் உள்ளவர்கள். ஆகையால், நான் விளையாடும்போது எனக்குப் பல விதமாகப் பயம் உண்டாகும். அப்போது ஒரே குதியில் என் தாயின் பைக்குள் தாவிப் பதுங்கிக் கொள்வேன். அங்கும்கூடச் சிறிது நேரம் வரை என் நெஞ்சு படபட வென்று அடிக்கும்.

நான் இப்படிச் சில மாதம் வளர்ந்த பின், என்னை என் தாய் அதிக நேரம் விளையாட விட்டாள். அப்போது நானும் என் தாயைப் போல் புல்லையும் இலைகளையும் கொய்து தின்னத் தொடங்கினேன். ஆனால், என் தாயின் பக்கத்தைவிட்டு அதிகத் தூரம் போகமாட்டேன். விளையாடி விட்டு அவளுடைய வயிற்றுப் பையில் இளைப்பாறுவேன்; தூங்குவேன்.

அங்கே உட்கார்ந்து கொண்டு அவள் போகும் இடத்துக்கு எல்லாம் சுகமாகச் சவாரி போவேன். ஆனால், அவள் எனக்கு ஒன்றையும் காட்டவில்லை; ஒன்றையும் கற்றுக் கொடுக்கவில்லை. என்னை அவள் அதிகமாகக் கவனிக்கவே இல்லை. அவளுக்கு என் மேல் கொஞ்சம்கூட அன்பு இல்லையோ என்றுகூட நான் எண்ணினேன்!

எனக்கு வயது எட்டு மாதம் ஆனபோது ஒரு நாள் எனக்கு ஒரு பெரிய ஆபத்து நேர்ந்தது. அன்று என் தாயும் நானும் புதருக்கு இடையே கவலையற்று மேய்ந்து கொண்டிருந்தோம். திடீரென்று படபடவென்ற ஓசை கேட்டது. நான் நடுங்கிப் போனேன். என் தாயின் பையில் ஒரே தாவாகத் தாவினேன். என் தாய் மெல்லத் தன் தலையை உயர்த்தி, அந்தப் புதருக்கு வெளியே எட்டிப் பார்த்தாள். பார்த்தவுடன் வாயு வேகமாக ஓடத் தொடங்கி விட்டாள்.

ஆனால், அந்த ஓசை வரவர அதிகமாயிற்று. என் தாய் சற்றே திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது நானும் என் தலையை நீட்டி எட்டிப் பார்த்தேன். வேட்டைக்காரர்கள் சிலர் குதிரைகளில் ஏறித் துரத்திவரக் கண்டேன். மிகவும் வேகமாகத் தாவித் தாவி ஓடிக்கொண்டிருந்த என் தாய் சட்டென்று நின்றாள். தன் உடலை ஓர் உதறு உதறி, என்னை வெளியே எறிந்தாள். அவள் எறிந்த வேகத்தில் நான் மூன்று குட்டிக்கரணம் போட்டுக் கொண்டு உருண்டேன். பிறகு மெல்ல எழுந்திருந்து உட்கார்ந்து சுற்றிப் பார்த்தேன். என்னை விட்டு விட்டு, என் தாய் வேகமாக ஓடுவதைக் கண்டேன்.



என் மனத்தில் அச்சம் பகீர் என்றது. அவள் பின்னால் நானும் ஓடலாம் என்று நினைத்தேன். அதற்குள் அவள் தலை மறைந்து விட்டது. அவள் போன இடம் இன்னதென்று எனக்குத் தெரிய வில்லை. என் உடல் பயத்தால் கிடுகிடென்று ஆடிற்று. பக்கத்துப் புதரில் நான் ஒளிந்து கொண்டேன். வரவரக் குதிரைகளின் குளம்போசை குறைந்தது. 'இந்தத் தடவை பிழைத்தது மறுபிழைப்பு' என்று எண்ணினேன்.

என் தாய் வருவாள் என்று அங்கேயே வெகு நேரம் காத்துப் பார்த்தேன். 'என்னை இப்படித் தனியே விட்டு விட்டு, என் தாய் ஓடி விட்டாளே. தன் குழந்தையை இப்படி ஒருத்தி கைவிடுவது உண்டா? தன் உயிர்தான் பெரிது என்றல்லவோ அவள் நினைத்தாள்?' என்று பலவிதமாக எண்ணி வருந்தினேன். அவளுடைய அன்பையும் அறிவையும் நான் அப்பொழுது தெரிந்து கொள்ளவில்லை. பின்புதான் எனக்குத் தெரிந்தது.

என்னைத் தூக்கிக்கொண்டு அவளால் குதிரைகளைவிட விரைவாக ஓடியிருக்க முடியாது. அப்படி அவள் ஓட முயன்றிருந்தால், நாங்கள் இருவரும் அன்று அந்த வேடர்களின் கையில் அகப்பட்டிருப்போம். என்னைப் புதரின் அருகே தள்ளியபோது அவளுடைய கருத்தெல்லாம் என்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதே. அவர்களுக்குத் தெரியாமல் என்னைக் கீழே தள்ளி விட்டுத் தான் ஓடினால், வேடர்கள் தன்னைத் துரத்தி வருவார்கள்; என்னைக் கவனிக்க மாட்டார்கள்; நான் பிழைத்து விடுவேன் என்பதே அவள் கருத்து.

பாவம்! அவளை நினைக்கும் போது என் கண்ணில் நீர் பெருகுகிறது. அவள் அன்று தன் உயிரைப் பறிகொடுத்து என் உயிரைக் காப்பாற்றினாள்.

என் தாயை விட்டுப் பிரிந்து சில நாள் வரையில் எனக்குப் பித்துப் பிடித்த மாதிரி இருந்தது. சில வேளைகளில் கண்ணில் நீர் ததும்பும்; நான் விம்மி விம்மி அழுவேன்.

ஒரு நாள் நான் புதரின் அடியில் மேய்ந்துகொண்டிருக்கும்போது என்னுடைய பெரிய மாமனும் அருகில் இருந்தான். அப்பொழுது புதருக்கு வெளியே ஏதோ சலசல என்று சத்தம் கேட்டது. என் மாமன் மெல்லத் தலையை உயர்த்தி, எட்டிப் பார்த்தான். சட்டென்று தாவி ஓடத் தொடங்கினன். அப்பொழுது புதருக்கு வெளியிலிருந்து இரண்டு சிறிய நாய்கள் அவனைத் துரத்தி ஓடக் கண்டேன். நான்தான் அப்பொழுதே சொல்லிவிட்டேனே: நாங்கள் கோழைகள். எங்களுக்குச் சண்டை என்றால் பிடிக்காது.

அந்த நாய்களில் ஒன்று என் மாமனின் அருகே வந்துவிட்டது. அவன் அங்குள்ள அடர்ந்த புதர் ஒன்றின் பக்கத்தில் போனன். நாயை நோக்கிச் சட்டென்று திரும்பி நின்றான். அவனுக்குப் பின்புறத்தில் புதர் இருந்தபடியால், நாய் அவனை எதிரிலிருந்து கடிக்க வந்தது. அப்பொழுது அவன் துள்ளிக் குதித்து, வாலைச் சுழற்றி அதை ஓர் அடி அடித்தான். நாய் சுருண்டு விழுந்துவிட்டது. அது எழுந்திருப்பதற்குள் அவன் அதன் மேலே பாய்ந்தான். தன்னுடைய கூர்மையான நகங்களால் அதைப் பீறிக் கிழித்தான். அது ஊளையிட்டுக்கொண்டே செத்துப் போயிற்று.

இதற்குள் மற்றொரு நாயும் சற்றே கிட்ட வந்தது. அதைக் கண்டதும் என் மாமன், 'இன்றைக்கு ஒரு சண்டை போதும். மற்றொன்று வேண்டாம்' என்று நினைத்து, மறுபடியும் ஓடினன். அவனுடைய நா வறண்டு போயிற்று. அதனால், அவன் நீரோடையைப் பார்த்து ஓடினன். அந்த நாயும் விடாமல் துரத்தியது.

நீரோடையில் என் மாமன் இறங்கினன். அதற்குள் மார்பளவு ஆழம்வரை நடந்துபோய், மடக்கு மடக்கு என்று தண்ணீர் குடித்தான். அந்த நாய்க்கு அந்த ஆழம் நிலைக்காத ஆழம். ஆகவே, அது ஓடையில் நீந்தி, அவனைக் கடிக்க வந்தது. என் மாமனுக்கு ஒரே கோபம்.

அந்த நாய் நீந்திக்கொண்டு பக்கத்தில் வந்ததும், அதன் தலையை அவன் சட்டென்று இறுகப் பிடித்தான். அதைத் தண்ணீருக்குள் அமிழ்த்தினன். அந்த நாய் உதறித் திமிறி, தப்பப் பார்த்தது. பிடித்த பிடியை அவனு விடுவான்? அவன் விட்டிருந்தால் அவனுடைய கதி என்ன ஆகும்? ஆகையால், அவன் நாயைப் பிடித்துத் தண்ணீருக்குள் அமிழ்த்திக் கொன்றுவிட்டான். அவனை நான் குற்றம் சொல்லமாட்டேன். வலுவில் அந்த நாய் சண்டைக்கு வந்தால், அவன் வேறு என்னதான் செய்யமுடியும்?

நானும் நன்றாக மேய்ந்து வளர்ந்து என் மாமனைப்போல் எட்டடி நீளம் ஆகப்போகிறேன். அவனைப்போல் உறுதியான கால்களும் கூர்மையான நகங்களும் அழகாக உருண்ட வாலும் எனக்கும் இருக்கும்!

அபாயச்சங்கு

'நீலம்'

௧

கடைசி நெருக்கடி

சூட்டுப் பொசுக்கும் வெயிலில் தன்னையே மறந்து கிரிக்கட் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் அபாயச் சங்கு. தன் கண்பர்களோடு தொண்டை கிழியக் கத்தி, ஆட்டக்காரர்களை உற்சாகப்படுத்தினன். வீட்டைப் பற்றியோ, ரோஸின் கழுத்திலே கட்டிய அட்டையைக் கழற்ற மறந்து விட்டது பற்றியோ அவனுக்கு நினைவே இல்லை. அபாயச் சங்கும் அவன் மாமியும் வீட்டில் இல்லாத சமயத்தில் சுந்தரவதனம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

வாசல் திண்ணையில் 'ரோஸ்' உட்கார்ந்திருந்தது. அதன் கழுத்தில் ஓர் அட்டை புதிதாகத் தொங்கியதைக் கண்டதும் அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. குனிந்து பார்த்தார். அதிலுள்ள கையெழுத்து? அவனுடையதேதான்! சந்தேகமில்லை. அவருக்கு அட்டையில் எழுதப் பட்டிருந்த வரிகள் சிரிப்பை மூட்டின; உடனே கோபமும் வந்தது. 'இதென்ன அயோக்கியத்தனம்? வெளியிலே என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?' என்று சங்கடப்பட்டார்

அவர். எதற்கும் அவன் வரட்டும் என்று ரோவின் கழுத்திலிருந்த அட்டையை அவிழ்த்துத் தன் சட்டைப் பையில் மடித்து வைத்துக்கொண்டார்.

மாட்ச் முடிந்து அபாயச் சங்கு வீடு திரும்பும்போது மணி சுமார் ஆறு இருக்கும். வழக்கத்துக்கு விரோதமாக அந்த நேரத்தில் மாமா வீட்டிலிருந்ததைப் பார்த்ததும் அவனுக்குத் திடுக்கிட்டுப் போயிற்று.

"எய், எங்கேடா போயிட்டு வறே? எவ்வளவு வசூலாச்சு?" என்று வெகு கடுமையாகக் கேட்டார். அபாயச் சங்கு நடுங்கினன். தான் கிரிக்கெட்டுக்குப் போனது மாமாவுக்குத் தெரிந்துவிட்டது என்பதை உணர்ந்தான்.

"நான் ஒண்ணும் பண்ணலியே மாமா? அந்தப் பசங்கதான்..." என்று அவன் ஏதோ மழுப்பினன். இந்த நெருக்கடியான சமயத்தில் சுந்தரவதனத்தின் நண்பர்கள் இருவர் சொல்லி வைத்த மாதிரி அங்கே வந்து சேர்ந்தார்கள்.

"என்ன இன்ஸ்பெக்டர்வாள்! உங்க வீட்டு நாய்க்குப் பிறந்த நாளாமே? ரொம்ப தடபுடல் போலிருக்கே!" என்று அவர்கள் விசாரித்தார்கள்.

சுந்தரவதனம் பதில் சொல்லுவதற்கு முன்பாக அவர்களில் ஒருவர், "இனிமேல் ஒரு பயல் உங்களிடம் உதவி நிதி, அது, இது என்று சொல்லிக்கொண்டு காசு பிடுங்க வரமாட்டான்! நல்ல ஏற்பாடு செய்து மருமகனைக் கிளப்பி விட்டீர்கள்! பேஷ்!" என்று சொல்லிச் சிரித்தார்.

சுந்தரவதனத்துக்கு அவமானமாய் இருந்தது. இனிமேல் யாரும் உதவி நிதிக்குத் தம்மிடம் வரமுடியாதபடி அபாயச் சங்கின் வேலை பலனைக் கொடுத்திருப்பதை நினைத்தபோது அவருக்குக் கொஞ்சம் திருப்தியாகத்தான் இருந்தது. 'ஆனல் இவன் இப்படியே விதவிதமாக விளையாடிக் கடைசியில் நம் தலைக்கே வந்து விட்டால் என்ன செய்வது?' என்ற கவலை வேறு அவருக்கு ஏற்பட்டது.

வாசலில் யார் யாரோ இன்ஸ்பெக்டரைக் கண்டு பேச வந்திருப்பதாக 615-ஆம் நம்பர் உள்ளே வந்து தெரிவித்தான். அதற்குள் அவர்களே உள்ளே வந்து விட்டார்கள்.

"உங்க பையனை நீங்க கண்டிக்கிறீங்களா, அல்லது நானே கவனிச்சுட்டுங்களா? 'ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கினல் ஒரு படி உப்பு இனம்' என்று கீலக் கொண்டு எழுதி வைச்சுடுத் தங்க உங்க பிள்ளை" என்று பழக் கடைக்காரப் பழனிசாமி பரிதாபமாக முறையிட்டான்.

"என்ன திமிர் ஸார், இவனுக்கு? நான் ஒரு கம்பவுண்டர் வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தேன். அதைக் கவனித்துவிட்டு, தொட்டியில் தண்ணீர் நிரப்பும் ஒரு தடியனை என்னிடம் அனுப்பி, தான் கம்பவுண்டர் வேலை செய்ய முடியுமென்றும், எவ்வளவு தண்ணீர் வேண்டுமானுலும் சளைக்காமல் கொண்டு வந்து கொட்டுவதாயும் சொல்லும்படி ஏவி விட்டிருக்கிறான். நான் கொடுக்கும் 'மிக்ஸர்' வெறும் பச்சைத் தண்ணீராம், ஸார்!" என்று சொல்லி டாக்டர் நந்தபெருமாள் நாற்காலியை

இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

சுந்தரவதனம் பேயறைந்தது போல் காணப்பட்டார். அபாயச் சங்கும் இவையெல்லாம் ஒரே சமயத்தில் படையெடுத்து வந்து சேருமென்று எதிர்பார்க்கவில்லை. மிகவும் பயந்து நடுங்கினன்.

அபாயச் சங்கின் அட்டகாசங்களுக்காகச் சுந்தரவதனம் எல்லாரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவர்கள் முன்னிலையில் அப்போது தன்னுடைய போலீஸ் அதிகாரம் பலிக்காது என்பது அவருக்குத் தெரியும். புகார் செய்ய வந்திருந்த இன்னும் சிலர், இன்ஸ்பெக்டரின் நல்ல சுபாவத்தக்காக அவரிடம் அவர் மருமகனைப்பற்றி மேலும் ஒன்றும் சொல்லாமல் போய்க்கொண்டிருந்ததை அபாயச் சங்கு கவனித்தான். அப்படித் திரும்பியவர்களில், 'கறர் வைகுண்டம்' ஒருவர். அதுதான் நாட்டு வைத்தியர் க. வை. முத்துசாமி! அவர் வீட்டின் முன்புறத்திலுள்ள போர்டில் 'க' என்ற எழுத்தைக் 'கறர்' என்றும், 'வை' என்ற எழுத்தை 'வைகுண்டம்' என்றும் தாரினல் அபாயச் சங்கு எழுதி வைத்தான்! அவரிடம் வைத்தியத்துக்குப் போனல் நிச்சயம் வைகுண்டம்தான் என்பது அபாயச் சங்கின் முடிவு!

இன்ஸ்பெக்டர் கொடுத்த உறுதியின் பேரில் புகார் செய்ய வந்தவர்கள் வெளியேறி விட்டார்கள். சுந்தரவதனம் அபாயச் சங்கைப் பார்த்துக் கண்ணில் தீப்பொறி பறக்க, "போதுண்டா தடிக் கழுதை, உன் பட்டணப் படிப்பு! இங்கே போதியபடி உன் சங்கை ஊதியாச்சு! மீதியை ஊருக்கே போய் ஊது! உன்னைக் கட்டி மேய்க்க என்னல் ஆகாது! நாளையே புறப்பட்டு ஓடு! இங்கே லீவுக்குப் பிறகும் நீ வரவேண்டாம்" என்று ஆத்திரம் தாங்காமல் உரக்கக் கத்தினர்.

அநாதைகளைக் காப்பாற்றும் பகவானைப் போல, வெகு காலத்துக்குப் பிறகு புஷ்பவனம் அங்கே வந்து சேர்ந்தார். அவருக்கு எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொன்னர் சுந்தரவதனம். அவர் பதிலே பேசவில்லை.

மறு தினம் ஜவான்கள் 615,98-ஆகிய இருவரும் அபாயச் சங்கை ரெயிலேற்றப் புறப்பட்டு விட்டனர். ரெயில்வே கான்ஸ்

டேபிள்களிடம் துணை சேர்த்து அபாயச் சங்கு ஊருக்கு அனுப்பப் பட்டான்.

இனிமேல் சரியாக நடப்பதாக எவ்வளவோ அபாயச் சங்கு மாமா விடம் மன்றாடினான். மாமியிடம் அழுது பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை.

கிராமத்துக்குத் திரும்பியதும் இவனைப்பற்றிய ஊராரின் கேலிப் பேச்சு ரொம்ப அதிகரித்தது. "இது எங்கே உருப்படப்போகிறது? போன மச்சான் திரும்பிவிட்டான் டோய்!" என்று எல்லாரும் அபா யச் சங்கின் காதில் விழும்படி பேசி ஏளனம் செய்தார்கள்.

அபாயச் சங்குக்கு இதனால் வெளியிலேயே தலை காட்ட முடியாமல் அவமானமாய் இருந் தது. வீட்டோடு அடைபட்டுக் கிடந்தான். பொழுதே போக வில்லை. கஷ்டப்பட்டான். ஆகா ரம் பிடிக்கவில்லை. தூக்கமும் வருவதில்லை. பொழுது போவதோ பெரும்பாடாக இருந்தது. ஊருக் குத் திரும்பி வந்து கிட்டத்தட்ட ஒரு மாதமாகிவிட்டது. ஒரு நாள் பீரோமீது இருந்த ஒரு காகிதக் கட்டு கண்ணில் பட்டது. அபாயச் சங்கு அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அவ்வளவும் மாமா எழுதியிருந்த கடிதங்கள்.

பட்டணத்தில் அவன் அடித்தக் கூத்துக்களை எல்லாம் அவர் அந்தக் கடிதங்களில் வரிசையாக எழுதி, தம்முடைய மனக் கஷ்டத்தைத் தெரியப்படுத்தியிருந்தார். அவற் றை எல்லாம் படித்ததும் கண் களில் நீர் துளித்தது.

தங்கள் மகனின் நிலைமையைப் பார்த்துக் கணக்குப் பிள்ளை ஐயா வும் அவர் மனைவியும் வருத்தப் பட்டார்கள். ஆனால், அவர்கள் என்ன செய்ய முடியும், பாவம்!

'படிப்பில்லாமல் வெறும் தடிய னாக இருந்தால் யார் மதிப்பார்கள்?' என்ற எண்ணம் அபாயச் சங்கின் மனத்தை அரித்துவந்தது. அவனுக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றியது. உடனேயே மாமா வுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் தனக்குப் புத்தி வந்துவிட்ட தாகவும், தன்னை மன்னித்து விடுமாறும் மிக வணக்கமாகப் படிப் போர் மனம் உருகும்படி கேட்டுக் கொண்டிருந்தான்.

நிஜமாகவே தங்கள் மகன் வருத்தப்படுவதை அறிந்து கணக் குப் பிள்ளை ஐயாவுக்கும் அவர் மனைவிக்கும் வருத்தமாயிருந்தது. இனி அவன் திருத்தி விடுவான் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

மறு தினமே அவர்கள் மகனை அழைத்துக்கொண்டு பட்டணத் துக்குப்போனார்கள். சுந்தரவதனத் திடம் அவர்களும் மகனுக்காகப் பரிந்து பேசினார்கள். இப்பொழுது அபாயச் சங்கு தன் தவற்றை உணர்ந்து அதற்காக வருத்தப்படு கிறான் என்பது தெரிந்ததும் மனம் இளகி சுந்தரவதனமும் அபாயச் சங்குக்கு அபயமளித் தார். அவனும் தன் விஷம வேகத்தைப் படிப்பில் முழுதாகத் திருப்பி, 'அறிவுச் செல்வன்' என்ற பட்டப் பெயரைப் பெற்றான். சர்க் காரில் பெரிய வேலையும் கிடைத் தது. தவறு செய்த அநேகருக்கு மாமா தனக்கு அபயம் அளித்த மாதிரியே அவனும் அபயமளித் தான்!

முற்றும்.

ஜாதி மாம்பழம்

வாண்டுமாமா

சோமு ஒரு சாதாரண விவசாயி. அவனிடம் இருந்ததெல்லாம் ஒரு காணி நிலமும் ஒரு சின்னக் குடிசையும்தான். அவனும் அவன் மனைவி மக்களும் அந்த நிலத்தில் பாடுபட்டு, இரவும் பகலும் உழைத்துப் பயிர் செய்தார்கள். அதில் விளையும் காய்கறி முதலியவைகளை விற்று ஜீவனம் நடத்திவந்தார்கள். சோமுவைவிட அதிக நிலமும் வருவாயும் உள்ளவர்கள் அந்தக் கிராமத்தில் உண்டு. ஆனால் அவர்கள் எல்லாரும் எப்போதும் குறைப்பட்டுக் கொண்டேதான் இருந்தார்கள். ஆனால் சோமு தனக்குக் கிடைத்ததைப் பெரிதாக எண்ணித் திருப்தியுடன் இருந்தான்.

சோமுவின் குடும்பம் பகல் முழுதும் வேலை செய்யும். ஆனால் இரவில் எல்லாரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடும்போது பகலில் உழைத்த களைப்பை மறந்து உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

காணி நிலத்தில் காய்கறி பயிரிட்டுக் காசு சம்பாதித்ததைத் தவிர, சோமு தன் குடிசையைச் சுற்றிச் சில மரங்களையும் வைத்திருந்தான். அவற்றில் ஒரு மாமரம் பெரிதாகிப் பலன் தர ஆரம்பித்தது. அந்த மாமரங்களில் கண்ணைப் பறிக்கும்படியான பழங்கள் காய்த்துத் தொங்கின. 'அதன் பழங்களைப்போல ருசியுள்ள பழங்களை வேறு கண்டதுமில்லை; உண்டதுமில்லை' என்று அந்த ஊரிலுள்ள அத்தனை பேரும் புகழ்ந்தார்கள். அவ்வளவு இனிய சுவையுடையதாய் இருந்தது அந்தத் தோட்டத்துப் பழம். ஆகவே ஊரார் அந்த மாம்பழத்துக்கு 'ஜாதி மாம்பழம்' என்று பெருமையுடன் பெயரிட்டார்கள்.

அந்த ஊரிலுள்ள அத்தனை பேருக்கும் தன் மரத்தில் காய்க்கும் எல்லாப் பழங்களையும் சோமு கொடுத்தான். விலைக்கு இல்லை; இலவசமாகத்தான். அவன் அந்த மரங்களை லாபம் சம்பாதிப்பதற்காக வைத்திருக்கவில்லை. ஆகவே சோமு காசு வாங்கிக் கொள்ளாமலேயே பழங்களை எல்லாருக்கும் கொடுத்தான்.

சோமுவின் தோட்டத்து ஜாதி மாம்பழத்தின் மகிமை சுற்று வட்டாரத்துக் கிராமங்களிலெல்லாம் பரவ ஆரம்பித்தது. ஒரு நாள் ஓர் அழகான - அலங்காரமான வண்டி வந்து சோமுவின் குடிசைமுன் நின்றது. அதிலிருந்து ஒரு பெரிய தனவந்தர் அட்டகாசமாக இறங்கினார். அவரது உடலை ஜரிகை வேஷ்டியும் அங்கவஸ்திரமும் அலங்கரித்தன. கை விரல்களில் வரிசையாக அணிந்துகொண்டிருந்த மோதிரங்கள் டாலடித்துச் சிமிட்டின. முறுக்கிவிட்ட மீசையுடன் குச்சியை ஊன்றிக்கொண்டு சோமுவின் குடிசைக்கு நடந்தார் அந்தத் தனவந்தர். அவரைக் கண்டதும் சோமு குடிசையிலிருந்து வெளியே வந்து வரவேற்றான்.

“நான் அடுத்த கிராமத்து மிராசுதார். என்னிடம் ஏராளமான தோப்புத் துரவுகள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான மாமரங்களுக்குச் சொந்தக்காரன் நான். இந்த உலகத்திலுள்ள விதவிதமான மாம் பழங்களின் தினுசுகள் என் தோட்டத்தில் இருக்கின்றன. ஆனால் உன்னிடமுள்ள இந்த ஜாதி மரம் மட்டும் என் தோட்டத்தில் இல்லை. ஜனங்கள் உன் தோட்டத்துப் பழங்களைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆகவே உன்னுடைய ஜாதி மாமரக் கன்று ஒன்றை நான் வாங்கிப்போக வந்திருக்கிறேன். அதற்குத் தகுந்த விலை தருகிறேன். கொடு'' என்றார் தனவந்தர்.

சோமு உடனே, “முடியாது, நான் அவைகளை விற்கமாட்டேன். நான் அப்படி ஒன்றும் அதிசயமான மாமரத்தைப் பயிர் செய்யவில்லை. மட்டமான புளிக்கும் மாங்கொட்டைகளைத்தான்



ஊன்றினேன். அது இப்படி ருசியுள்ள பழங்களைத் தருவது கடவுளின் கருணைதான்'' என்று சொன்னான்.

ஆனால் அந்த மிராசுதார் சோமுவின் பதிலினால் திருப்தியடையாமல் மறுபடியும் சோமுவை வற்புறுத்தினார்.

''நீ கேட்கும் பணத்தை உன் கன்றுகளுக்குத் தருகிறேன். உன் ஆயுள் முழுமைக்கும் உழைக்காமல் உட்கார்ந்து சாப்பிடக்கூடிய அளவுக்கு உனக்குப் பொருள் தருகிறேன்'' என்றார்.

ஆனால் சோமு சிரித்தான்; சம்மதிக்கவில்லை.

''நான் பணக்காரனாக விரும்பவில்லை. இப்போது நான் நடத்தும் வாழ்க்கையில் திருப்தியோடுதான் இருக்கிறேன். என் குடும்பமும் தனக்குத் தேவையானவைகளைப் பெற்று மகிழ்ந்திருக்கிறது'' என்றான் சோமு.

சோமுவிடம் விலைகொடுத்து மாங்கன்று பெறமுடியாது என்பதை அறிந்த தனவந்தர் கடைசியாக, ''சரி, விலைக்குக் கொடுக்க முடியாது என்றால் இலவசமாக வாவது எனக்கு உன் மரத்தின் ஒரு கன்று கொடு'' என்றார்.

''தாராளமாக..!'' என்று சொல்லி ஒரு கன்றைக் கொண்டு வந்தான். ''ஆனால் ஒன்று. இது வளராது என்பதை மட்டும் நான் சொல்லி விடுகிறேன்'' என்றான்.

ஆனால் தனவந்தர் அவன் வார்த்தையை லட்சியம் செய்யாமல் மாங்கன்றுடன் ஊர் திரும்பினார்.

ஊருக்கு வந்ததும் அந்த மாங்கன்றை மிகுந்த கவனத்துடன் விசேஷமான ஓர் இடத்தில் ஊன்றி அதை அக்கறையுடன் கவனித்து வளர்க்கலானார். ஆனால் அந்த மாங்கன்று பாலைவனசது மணலில் ஊன்றிய பசுஞ்செடியைப் போல வாடி, உலர்ந்து, கருகிக் குச்சியாக நின்றது.

மிராசுதார் ஆத்திரமும் வருத்தமும் கொண்டார். ஆயிரக்கணக்கான மரங்களுக்கு சொந்தக்காரனான தம்மால் இந்த மரத்தை வளர்க்க முடியவில்லையே என்ற அவமானம் அவரை வாட்டி எடுத்தது.

மறுபடியும் அவர் வண்டி சோமுவின் குடிசை வாசலில் போய்



மாஜிஸ்டிரேட்: நீ அந்த வீட்டில் திருடப்போனது உண்மைதானே?

திருடன்: பொய்யுங்க, எசமான்.

மாஜிஸ்: பின்னே எதற்கு இரவு இரண்டுமணிக்குப் போனாய்?

திருடன்: அந்த வீட்டிலே 'நல்வரவு'ன்னு போட்டிருந்ததைப் பார்த்தேங்க, எசமான். வயித்துப் பொழைப்பு ஒண்ணு இருக்குல்லேங்க, அதையும் கவனிச்சேன் அப்படியே!

—P. M. ஷண்முகம்.

கின்றது. சோமு புன்சிரிப்புடன் அவர் விருப்பப்படி இன்னொரு புதிய மாங்கன்றைக் கொடுத்தான்.

இந்தத் தடவையும் பலன் பூஜ்பம்தான்! மாங்கன்று காய்ந்து, கருகி விட்டது.



மூன்றாவது தடவையாக வந்த மிராசுதாரிடம், "நான்தான் இது உங்கள் நிலத்தில் வளராது என்று சொன்னேனே. ஏன் வீணாக இங்கிருந்து அவைகளைப் பிடிவாதமாக எடுத்துச் சென்று சாகடிக்கிறீர்கள்? அந்தக் கன்றுகள் இங்கேயே இருந்தாலாவது நன்றாகச் செழித்து வளர்ந்து சுவையான பழங்களைத் தாங்கி நிற்கும்" என்றான் சோமு.

உன் குடிசைக்கு அடுத்துள்ள நிலங்களை வாங்கி அவைகளைப் பயிர் செய்தால் அப்போது எனக்குப் பலன் தருமென்று நினைக்கிறேன்" என்றார் மிராசுதார்.

"பலன் தராது அவை எங்கும் உமக்குப் பலன் தராது. தன்னிடமுள்ளதைக் கொண்டு திருப்தியுடன் எவன் வாழ்கிறானோ அவனிடந்தான் இவை வளர்ந்து பலன் தரும். நீர் ஒரு பணக்காரர். ஆனால் நீங்கள் இன்னும் அதை ஏராளமாக்க விரும்புகிறீர்கள். இந்த ஜாதி மாம்பழம் பேராசைக்காரர்களிடம் வளராது" என்றான் சோமு.

"இவை இங்கே மட்டும் வளருவதற்கான ரகசியம்தான் என்ன?

மிராசுதாருக்கு அந்த மாமரத்தின்மீதுள்ள ஆசை அப்போதும் தணியவில்லை.

"சரி..நான் என்னிடமுள்ளதைக்கொண்டு திருப்தி அடைந்துவிட்டேன் என்று வைத்துக்கொள்..! எனக்கு இன்னொரு மாங்கன்று கொடு" என்று கேட்டார் மிராசுதார்.

இதைக் கேட்ட சோமு ஏளனமாகச் சிரித்தான்.

"ஐயா, என்னிடமிருந்து இந்த மாங்கன்றுகளை எதிர்பார்க்கும்போது, நீங்கள் எப்படி உங்களிடமுள்ளதைக் கொண்டு திருப்தியடைந்துவிட்டதாகச் சொல்ல முடியும்?" என்று கேட்டான்.

மிராசுதார் தலை குனிந்து அவமானத்துடன் திரும்பினார்.

அங்கே குதித்தோடி வந்த குழந்தைகளுக்குச் சோமு மாம்பழங்களை வாரி வாரி வழங்கினான்.

கண்ணன் தபால்

உங்கள் சந்தேகங்கள்

R. சரோஜா, மயிலாப்பூர்.

1. இந்தியாவில் மிகச் சிறந்த பிரசங்கி யார்?

இப்போது உதவிஜனுதிபதியாகப் பதவி வகிக்கும் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள்தான்!

2. சில குழந்தைகளுக்கு முகத்தில் சுருக்கங்கள் ஏற்படக் காரணமென்ன?

எண்ணெய்ச் சத்தும் வைடமின்'டி'யும் உடம்பில் போதுமான அளவு இருந்தால் சருமம் சுருக்கம் காணுது பளப்பளப்பாக மினு மினுப்புடன் இருக்கும். அதிகமாகச் சோப்புத் தேய்த்துக்கொள்வதாலும் அடிக்கடி பௌடர் அப்பிக்கொள்வதாலும் சுருக்கம் ஏற்படக் காரணமாகிறது.

R. G. சுப்பிரமணியன், வத்திராயிருப்பு.

1. சூரியனிடமிருந்து அதிகத் தூரத்தில் உள்ள கிரகம் எது?

புளூட்டோ. (Pluto)

2. கிரகங்களில் பெரியது எது?

குரு. (Jupiter)

3. செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வசிக்கிருர்கள் என்பது உண்மையா, அண்ணு?

ஜீவராசிகள் வசிக்கும் அளவுக்கு சூரியனிடமிருந்து விலகி, தூரத்தில் இருக்கிறது செவ்வாய் கிரகம். அத்துடன் இதில் சில ஒழுங்கான நேர்க் கோடுகளும் வட்டங்களும் தெரிவதால் அவைகள் கால்வாய்களாகவும் பெரிய ஏரிகளாகவும் இருக்கலாம் என்று ஊகிக்கப் படுகிறது. தண்ணீர் இருக்க வேண்டுமானுல் பிராணவாயு அவசியம் இருந்துதானே தீரும்? இதையெல்லாம் யோசித்து மனிதர்கள் உயிர் வாழக்கூடும் என்று ஊகிக்கிருர்கள்.

4. கடலின் உட்பாகத்தை அறிய போட்டோ காமிரா இருக்கிறதா?

இருக்கிறது. சாதாரண காமிராவில் இரவு நேரங்களில் பல்பு வெளிச்சத்தில் போட்டோ பிடிக்கிருர்கள் அல்லவா! அதே போலத்தான் கடலின் உட்பாகத்திலும் போட்டோ பிடிக்கிருர்கள். இந்தப் பல்பு மிகவும் பிரகாசமான வெளிச்சத்தைத் தரும். லென்ஸும் மிகச் சக்தி வாய்ந்தது.

ஜீவநாதன், லால்குடி.

1. இமய மலையின் நீளம், அகலம், உயரம் எத்தனை?

இமய மலையின் நீளம் 1500 மைல், அகலம் 500 மைல். உயரம் 29,0002 அடி அல்லது $5\frac{1}{2}$ மைல் என்று பூதத்துவ ஆசிரியர்கள் கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

2. என் வயது 16. தற்போதைய என் உயரம் $5\frac{1}{2}$ அடி. நான் எவ்வளவு வயதுவரை உயரமாக வளருவேன்?

25 வயது வரையில்.

3. வெண்டைக்காய் சாப்பிட்டால் மூளை விருத்தியடையும் என்பது வாஸ்தவமா?

அதிலுள்ள கொழுப்புப் பொருளில் பாஸ்பரம் அதிகம் இருக்கிறது. பாஸ்பரம் மூளையின் வளர்ச்சிக்கும் போஷாக்குக்கும் ஏற்ற வஸ்து.

D. லக்ஷ்மிநரசிம்மன், டால்மியாபுரம்.

1. விமானத்தில் காக்பிட், பியூஸிலேஜ் என்றால் என்ன?

காக்பிட் என்பது விமானி உட்காருமிடம். பியூசிலேஜ் என்பது புகைக் கூண்டைப் போன்ற ஆகாய விமானத்தின் உடல் பாகம். (Shuttle-like body of Aeroplane)

2. ரத்தக் குறைவை நீக்க எந்தவிதமான உணவை உட்கொள்ள வேண்டும்?

நல்ல புஷ்டி தரும் கொழுப்புச் சத்துக்கள், வைடமின்கள் அடங்கிய உணவைச் சாப்பிடலாம். பால் அதிகம் சாப்பிடலாம். மீன் எண்ணெயும் சாப்பிடலாம்.

3. இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் இப்போது சிறந்தவர்கள் யார்?

ஹஸாரே, மன்காட், உம்ரிகர், ராம்சந்த், ராய்.

V. வேங்கடரமணன், ஞானவொளிவபுரம்.

1 தற்பொழுது இந்தியாவின் ரெயில்வே மந்திரி யார்?

ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி.

இ. பராசிங்கப், வவுனியா, சிலோன்.

1. புதனை எந்தெந்த மாதங்களில் கிழக்கேயும் மேற்கேயும் பார்க்கலாம்?

மார்ச், ஏப்ரல் மாதங்களில் மேற்கே மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்துடன் சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு தெரியும். ஜுலை, ஆகஸ்டில் கிழக்கே சூரிய உதயத்துக்கு முன்னர் தெரியும்.

2. சந்திரனைக் கிரகங்களுடன் சேர்க்காததேன்? சந்திரனைப் போய்ப் பார்க்க முயற்சித்தார்களே பலனளித்ததா?

சந்திரன் சூரியனைச் சுற்றும் நேர் கிரகம் அல்ல. பூமிதான் கிரகம். சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. பூமியுடன் சேர்ந்து சூரியனையும் சுற்றுகிறது. ஒரு கிரகத்தைச் சுற்றினால் அதற்கு உபகிரகம் என்று பெயர். சந்திரன் ஓர் உபக் கிரகம் (Satellite). சந்திர மண்டலப் பிரயாணம் கற்பனையளவில்தான் இருக்கிறது.

M. கிருஷ்ணமூர்த்தி, தூத்துக்குடி.

1. சினிமா பார்ப்பது நல்லதா, கெட்டதா?

அதிகமாகப் பார்ப்பது கண்ணுக்கும் உடலுக்கும் கெடுதலை விளைவிக்கும்.

2. ஆல் இந்தியா ரேடியோவில் தமிழ்ச்செய்தி, ஆங்கிலச் செய்தி அறிக்கைகள் எங்கிருந்து ஒலிபரப்பப்படுகின்றன?

எல்லாச் செய்திகளும் டில்லியிலிருந்தே ஒலிபரப்பப்படுகின்றன.

3. வாழ்வில் உயர்வு தாழ்வுக்குப் பணம், குணம், கல்வி, அதிருஷ்டம் இவற்றில் எது முக்கிய காரணம்?

எல்லாம்தான்!

G. கிருஷ்ணமூர்த்தி, திருவண்ணமலை.

1 அமெரிக்காவில் இதுவரை எத்தனை குடியரசு ஜனதிபதிகள் இருந்திருக்கிருர்கள்?

ஐசனேவர் உட்பட பதின்மூன்று பேர்.

2. ஜீவநதி என்ருல் என்ன?

சுட்டுப் பொசுக்கும் கோடையுள்பட எந்தக் காலத்திலும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் நதிக்கு ஜீவநதி என்று பெயர்.

3 உலகத்திலுள்ள ஏழு அதிசயங்கள் என்னென்ன?

1. சைனவின் பெரிய சுவர் 2. பாபிலோனிலுள்ள தொங்கும் தோட்டங்கள் 3 தாஜ்மஹால் 4. பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் 5. மாஸ்கோவிலுள்ள பெரிய மணி. 6. எகிப்திலுள்ள பிரமிட்டுகள் 7. பாரிஸிலுள்ள ஈபில் கோபுரம்.

J. சுந்தரராஜன், மதுரை.

1. உலகத்திலேயே நீளமான ரயில் பாதை எங்குள்ளது?

ரஷ்யாவில் விலாடிவாஸ்டாக் முதல் மாஸ்கோ வரையில் உள்ளது.

வேடிக்கைக் கணக்கு

கீழே இருக்கும் பெருக்கல்களைப் பாருங்கள். வேடிக்கையாக இல்லையா!

I 987654321 × 9 — 88 88 88 88 89
× 18 — 177 77 77 77 78
× 27 — 266 66 66 66 6 7
× 36 — 355 55 55 55 5 6
× 45 — 444 44 44 44 4 5
× 54 — 533 33 33 33 3 4
× 63 — 622 22 22 22 2 3
× 72 — 7 11 11 11 11 1 2
× 81 — 8 00 00 00 00 0 1

II இந்தப் பெருக்கலைச் செய்யுங்கள் பார்க்கலாம்.

123456789 × 999 999 999

—V. பார்த்தசாரதி, மயிலாப்பூர்.

திருத்தருப்பூண்டியில் நடந்த கண்ணன் (பெண்கள்) கிளைக் கழக அங்கத்தினர்களின் கூட்டம்.

வேடிக்கை வாக்கியம்

ஆ, ஆ, ஆ, ஆ, ஆ, ஆ, ஆ, ஆ, ஆ, ஆக்குதவான், கொள்ளை லா, லா, லா, லா, லா, லா, லா, லா, லாக்கே பொருளை விற்பான்.

ஏதாவது புரிகிறதா? சற்று யோசித்துப் பாருங்கள். தெரியா விட்டால் கடைசியில் பாருங்கள்.

—H. சந்திரசேகரன், ஆரணி.

வேடிக்கைக் கணக்கு விடை :

1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1

வேடிக்கை வாக்கியம்

I முதல் வரியில் எவ்வளவு 'ஆ' இருக்கிறதோ அதை எண்ணி முதல் 'ஆ'வுடன் சேர்த்தால் 'ஆபத்துக்கு உதவான்' என்று வரும்.

தமிழ்நாடு [illegible] நூலகம்
211785
சென்னை-600 008

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கேட்டீர்களா!

ஸ்டாலின் மறைவு

ஸோவியத் ருஷ்யாவின் பிரதமர் மார்ஷல் ஸ்டாலின் மார்ச் மாதம் 5-ஆம் தேதி இரவு 9-30 மணிக்குக் காலமானூர். இவருக்கு வயது 73. இவர் 28 வருஷங்களாக இந்தப் பதவியைத் திறம்பட நிர்வகித்து வந்திருக்கிருர். ஸோவியத்தின் தந்தை என்று புகழப் படும் லெனினுடைய பிரதம சீடர் இவர் செல்வாக்கு அற்றிருந்த ருஷ்ய நாட்டை உலக வல்லரசுகளில் ஒன்ருக ஆக்கிய பெருமை இவரையே சாரும். சென்ற இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது இவரே நேரில் தலைமை வகித்து ஜெர்மானிய சேனையை அடித்து விரட்டினுர். இவருடைய யுத்தமேதையைப் பாராட்டி இவருக்கு மார்ஷல், ஜெனரலிஸிமோ என்ற பட்டங்கள் சூட்டப் பட்டன. ஸ்டாலின் என்ருலே இரும்பு போன்ற உறுதியான மனிதர் என்றுதான் அர்த்தம். இவருக்கு இரண்டு மனைவியர் இருந்தார்கள். இரண்டு பெண்களும் ஒரு மகனும் இருக்கிருர்கள். இவருடைய ஒரே மகன் ருஷ்யப் படையில் பதவி வகிக்கிருர். ஸ்டாலினுடைய கிரெம்லின் மாளிகை அணுக்குண்டுக்குக்கூட அசையாத கோட்டை என்று சொல்லப்படுகிறது. மூளையிலுள்ள ரத்தக் குழாய் வெடித்த தனல் இவர் உயிர் துறந்தார். லெனினுக்குப் பக்கத்தில் இவருடை'' உடலையும் சமாதியாக வைத்திருக்கிருர்கள். இவருக்கு அடுத்தபடி யாக மாலெங்கோவ் என்பவர் இப்பொழுது அந்த நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப் பட்டிருக்கிருர்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் 3-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் விஜய வருடப் பிறப்பன்று (13-4-53, திங்கட் கிழமை) மாலை 4-மணிக்குச் சங்கக்காரியாலயத்தில் (135, பவளக்காரத் தெரு) நடைபெறும். குழந்தைகளுக்காக எழுதுவோர் அனைவரும் இச் சங்கத்தில் அங்கத்தினராகலாம். சித்திரை மாதம் முதல் அங்கத் தினர் சேர்க்கப்படும். வருட சந்தா ரூபாய் ஒன்னரை

யானைப் பரிசு

சீனக் குழந்தைகளுக்குப் பரிசாக இந்தியக் குழந்தைகள் ஒரு யானையை அனுப்பியிருக்கின்றனர் அதற்கு 'ஆஷா' என்று நேருஜி பெயரிட்டிருக்கிருர். நேருஜி திரிபுராவுக்குச் சென்றபோது அவருக்கு ..ந்த யானையை அன்பளிப்பாக அளித்தார்கள். அதையே இந்தியக் ..ழந்தைகள் சார்பாகச் சீனக் குழந்தைகளுக்கு அனுப்பியுள்ளார்கள்.

..லக்கரிச் சுரங்கம்

தென்னுர்க்காடு ஜில்லா நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பரீட்சார்த்தத் திட்ட வேலைகளைச் சென்னைக் கைத் தொழில் மந்திரி ஆரம்பித்து வைத்தார். இந்தப் பரீட்சார்த்தத் திட்டம் முடிவடைந்து முழு வேலைக்கு ஆரம்பித்தால் சுமார் 200 கோடி டன் நிலக்கரி கிடைக்கும் என்று நிபுணர்கள் கருதுகிருர்கள். இப்போது நமக்கு வேண்டிய நிலக்கரி மேல் வங்கம், மத்திய இந்தியா முதலிய இடங்களிலிருந்து வருகிறது. இந்தத் திட்டம் வெற்றி யடைந்தால் சென்னை ராஜ்யம் தொழில் வளம் நிறைந்து விளங்கும்.

Reg. No. M. 5542

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஜக்கு

'பட்டணம் போகப்போகிறேன்' என்று நண்பர்களிடம் பெருமையடித்துக் கொள்கிறான் ஜக்கு. எஞ்சின் டிரைவரின் உதவியால் ஒரு நாள் பட்டணத்துக்கே போய்விடுகிறான். ஹார்பர் போகிறான்; ஏரோட்ரோம் போகிறான்; ஸ்விம்மிங் பூல் போகிறான்; டிராமா போடுகிறான்! எங்கே பார்த்தாலும், 'ஜக்கு ஜக்கு' என்று அவனைப் பற்றியே பேச்சு! ஆனால் அவனை யாரோ தினம் டெலிபோனில் கூப்பிட்டு மிரட்டுகிறார்கள். அந்த டெலிபோன் ஆள் யாரென்று கண்டுபிடிக்கவே முடியவில்லை. படிக்கும்போது நமக்கும் அந்த ஆள் யாரென்று துடிதுடிப்பாகவே இருக்கிறது. எப்படியோ ஜக்கு சமாளித்துக் கண்டுபிடிக்கிறான்—சுவாரஸ்யமான சம்பவங்கள். விறுவிறுப்பான சம்பாஷணைகள். படிக்கத் தொடங்கினால் கீழே வைக்க மனம் வராது. அழகான படங்கள்; நல்ல காகிதம்.

'ஆர்வி' எழுதியது. விலை 8 அணா

★

குளிகைத் தீவு

அருமையான சித்திரக் கதை. இளவரசன் நாகநந்த குளிகைத் தீவுக்குச் செல்கிறான். பல தீரச் செயல்களு துணிகரமான சாகஸச் செயல்களும் செய்கிறான். மந்திரவா யின் ஜாலங்கள் பயன்படவில்லை. ஆகாய விமானத்தை தோற்கடிக்கும் சூரக் கழுகு இருந்தும் அவனை ஆபத்துக் சூழ்ந்துகொள்கின்றன. மந்... தீவின் இளவரசி அவனை பெண்ணாகவே மாற்றிவிடுகிறாள். எல்லா இன்னல்களை கடந்து நாகநந்தன் வெற்றிமாலை சூடித் திரும்புகிறான்.

திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த கதை. கண்ணைக் கவ அழகான சித்திரங்கள்.

கதை - 'ஆர்வி'; சித்திரம்: சங்கர். விலை 4 அ

புத்தக வியாபாரிகளுக்கும் கண்ணன் அங்கத்தினர்களுக்கும் கமிஷன் உண்டு. எல்லா ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

விவரங்களுக்கு:

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★